விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

சங்கு 24
ஒலி 349 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 17 ஞாயிற்றுக்கிழமை (03.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பூமியின் இருப்புக்காக ஒன்றுபட வேண்டும்

### உலகத் தலைவர்களிடம் ஜனாதிபதி ரணில்



(டுபாய்)
காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்தி பூமியின் இருப்பை உறுதி செய்வதற்காக முழு உலகமும் ஒன்றுபட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரம 19


### வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு சட்டம்

## நீதியே இல்லாத நாட்டில் எதற்கு நீதி அமைச்சர் - சுமந்திரன்

(கொழும்பு)
வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு சட்டங்கள். நீதியே இல்லாத நாட்டில் எதற்கு நீதி அமைச்சர் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பாராளுமன்றத்தில் வைத்து நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை பார்த்து கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 04



# பயங்கரவாத சட்டத்தை உடன் நிறுத்துங்கள்

## ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வலியுறுத்து



(கொழும்பு)
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் கைது செய்யும் நடவடிக்கைகளுக்காகத் தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

சர்வதேச தர நிலைகள் மற்றும் மனித 19

## வங்காளவில் தாழமுக்கம்

### வடக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)
வங்காளவிரிகுடாவில் தாழமுக்கம் நிலை கொண்டுள்ளதால் வடக்கு கிழக்கில் பலத்த மழைக்கு வாய்ப்புள்ளது என 19

### இந்த வருடம்

## 15 இலட்சம் சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)
இந்த வருடம் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 12,63158 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை 19

## ஒதியமலை படுகொலை நினைவேந்தலில் குழப்பம் விளைவித்த பொலிஸார்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு- ஒதியமலை படுகொலை நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டபோது பொலிஸாரால் குழப்பம் விளைவிக்கப்பட்டுள்ளது.

ஒதியமலைப் படுகொலையின் 39 ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று ஒதியமலை சனசமூக நிலைய வளாகத்தில் படுகொலை 19



## அச்சுவேலியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை பிரதான வீதி அச்சுவேலி நாவற்காடு பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

புத்தூர் பகுதியைச் சேர்ந்த சிவநேசன் சியான் என்ற (வயது - 22) 19



### பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்

## சுனாமி எச்சரிக்கை விடுப்பு

(மணிலா)
பிலிப்பைன்ஸில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இது ரிக்டர் அளவுகோலில் 7.6 மெக்னிடியூட்டாக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பிலிப்பைன்ஸின் சில பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பங்களாதேஷில் நேற்றுக் காலை நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. 19

### காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில்

## அடுத்த ஆண்டுக்குள் விசாரணைகள் நிறைவு செய்யப்படும் - நீதியமைச்சர்

(கொழும்பு)
காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் 4795 முறைப்பாடுகள் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முறைப்பாடுகள் தொடர்பான சகல விசாரணைகளையும் அடுத்த ஆண்டுக்குள் நிறைவு செய்து உறுதியான தீர்மானத்தை எடுக்க எதிர்பார்த்துள் 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 22 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர தெரிவித்தார்.

குறித்த வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, ஆசிரியர்கள் ஓய்வு பெற்றமையினால் ஏற்பட்ட வெற்றிடங்களுக்குரிய பாடங்களுக்கான ஆசிரியர்களை சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர தெரிவித்தார்.

மாகாண சபைகளின் கீழ்க் காணப்படும் பாடசாலைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ்க் காணப்படும் பாடசாலைகளுக்காக இவ்வாறு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் பாடசாலைத் தவணையின் போது ஆட்சேர்ப்பு நடவடிக்கையை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர சுட்டிக்காட்டினார்.

(ம-7)


## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7786)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

## ஆங்கில வகுப்புகள்

"Zoom" மூலம் புதிய வருடத்திற்கான வகுப்புகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**மட்டுப்படுத்தப்பட்ட வகுப்பு**
**தரம் 6 - 11 வரை** (18087)

**070 644 8007**

## வீடு வாடகைக்கு தேவை

நான்கு பேர் கொண்ட வைத்தியர் குடும்பத்திற்கு நல்லூர், கந்தர்மடம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடத்தில் வீடு வாடகைக்கு தேவை. (18078)

**070 234 9949**

## வேலையாட்கள் தேவை

- வீட்டு வேலைக்கும் வயோதிப அம்மாவை பராமரிக்கவும் பெண் உதவியாளர் தேவை.
- வீட்டு சுத்திகரிப்பு, பூந்தோட்ட பராமரிப்புக்கு ஆண் உதவியாளர் தேவை.

(18089)

**077 773 0567**

## விற்பனைக்கு

200 L அபான்ஸ் குளிர்சாதன பெட்டி 5 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (18086)

**077 907 3761**

## A/L PHYSICS

24, 25 Batch இற்கான தனிப்பட்ட, குழு வகுப்புகளிற்கு

**Ranjit Sir**
B.Sc, P.G.D.E, S.L.P.S I (18074)

**077 600 4896**
2nd cross st, Jaffna.
Y.M.C.A Thampasidy

## அறைகள் வாடகைக்கு

கல்வி கற்கும் மாணவிகளுக்கான அறைகள் வாடகைக்கு உண்டு.
[ யாழ்ப்பாணம், கொக்குவில், மருத்துவ பீடம் முன்பாக உள்ள வீடு ] (18091)

**077 070 3472**

## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியூவில் 1 3/4 பரப்பு வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு (18085)

**077 732 6792**

## காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

**கைதடிச் சந்திக்கு அருகாமையில் 31 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.**


- கைதடிச் சந்தியில் இந்து 250m தூரத்தில்
- வங்கிகள் தபால் நிலையம் 200m தூரம்
- 20 அடி பாதை
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50m தூரம்)
- நன்னீர் ஊற்று நிலம்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- சித்த போதனா வைத்தியசாலைக்கு நேர் எதிராக அமைந்துள்ளது.
- வீடுகள் கட்டுவதற்கும் மண்டபங்கள் அமைப்பதற்கும் சிறந்த காணி
- வடமாகாண சபை அலுவலகம் 300m தூரத்தில்
- சித்த மருத்துவபீட பல்கலைக்கழகம் 200m தூரத்தில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

(18082)

**071 173 3911,**
**076 853 5022, 076 213 7239**


## மரண அறிவித்தல்

மலர்வு 22 - 11 - 1950



உதிர்வு 01 - 12 - 2023

### திரு. தம்பிராஜா கதிர்காமநாதன்

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா கதிர்காமநாதன் அவர்கள் நேற்று முன்தினம் (01.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

• அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் தவஈஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் ஜெயகிரிஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), கமலஜோதி (நெதர்லாந்து), தினேஸ் (வேலைத்தள மேற்பார்வையாளர் - கட்டடங்கள் திணைக்களம் யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் கேதாரகௌரி, கைலாசநாயகி, பத்மநாதன், பத்மகௌரி, சத்தியகௌரி, ஞானகௌரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் உமாசங்கரன், சுரேன்குமார், நிலானி ஆகியோரின் அன்புமிகு மாமனாரும் நடுஸ், உமா, தேவாஸ், கஜோல், தேவானி, கன்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் நாளை (04.12.2023) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

077 912 2820 (18081)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### கார்த்திகேசு வேலும்மயிலும்

(ஓய்வுநிலை அதிபர்)

திதி - அபரபட்ச தேய்பிறை

அபரபட்ச தேய்பிறை நாளன்று
இறைவனுடன் இரண்டறக் கலந்தீர்கள்
என்றும் எங்கள் இதயங்களில்
நிலையாய் வாழ்வீர்கள்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டித் தொழுகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத் தலைவியும் பிள்ளைகளும்
குடும்ப உறுப்பினர்களும்

புதிய வீதி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை. (C-7785)

தகவல் - V.K.ஜெகன், V.K.குகேந்திரன்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் ஓரங்கட்டப்படும் வடக்கு-கிழக்கு

## பாராளுமன்றில் அங்கஜன் இராமநாதன்



(கொழும்பு)

**வடக்கில் உள்ள அரச தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. மூடப்பட்ட தொழிற்சாலைகள் மீண்டும் ஆரம்பிக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. வட-கிழக்கு அபிவிருத்திகளிலும் வேறுபாடுகள் இருக்கும் நிலையில் எவ்வாறு நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படும் என பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கைத்தொழில் மற்றும் வர்த்தக, உணவு பாதுகாப்பு அமைச்சுகளுக்கான செலவினத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,பொருளாதார ரீதியில் ஒரு நாட்டை கட்டியெழுப்ப முக்கியமானது கைத்தொழில்துறை. ஆனால் எமது நாட்டில் இறக்குமதிப் பொருட்களையே நம்புவதால் கைத்தொழிலத்துறை ஆரோக்கியமான நிலையில் இல்லை. அதனால் கைத்தொழித்துறை வீழ்ச்சியடைந்து செல்கின்றது. தென்பகுதியிலுள்ள கைத்தொழில் துறைகளில் மட்டும் அமைச்சர்கள் அதிக அக்கறை எடுத்து முன்னேற்றுகின்றனர்.

எனவே விடயத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் வடக்கு மாகாணம் தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏராளமான கைத்தொழில் துறைகள் இருந்தன. இப்போது அனைத்தும் செயலிழந்துள்ளன.

குறிப்பாக பரந்தன் இரசாயன தொழிற்சாலை, காங்கேசன் துறை சீமெந்து தொழிற் சாலை, நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ,தேங்காய் எண்ணெய்த் தொழிற்சாலை, ஓட்டுத் தொழிற்சாலை வரை பல தொழிற்சாலைகள் இருந்தன. ஆனால்இன்று இவை இல்லை.

வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தம் முடிந்து 14 வருடங்களாகி விட்டபோதும் இவ்வாறான தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான எந்த வித நடவடிக்கைகளையும் காண முடியவில்லை.

உப்பளம் தொழிற்சாலை மட்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை விஸ்தரிக்க நாம் பல முறை கேட்டிருந்தும் இதுவரை நடவடிக்கை இல்லை. இவற்றை ஆரம்பித்தால் எமது மக்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும்.

இவற்றுக்கு அரசிடம் நிதி இல்லை என்றால் முதலிடுவதற்கு வடக்கு,கிழக்கில் உள்ள பலர் தயாராகவுள்ளனர். ஆனால் இதுதொடர்பில் அரசிற்கு அக்கறை இல்லை.

இதில் என்ன வேடிக்கை என்றால் அரச தொழிற்சாலைகள் இல்லை ஆனால் அதன் தலைமையகங்கள் மட்டும் உள்ளன. அமைச்சுகளிலும் அதற்கான பிரிவு உள்ளது.

ஒரு தலைவர் இருக்கின்றார் அவருக்கான வாகனம் வழங்கப்படுகின்றது, ஆளணி உள்ளது, அவர்களுக்கு சம்பளம், வாகன வசதிகள் வழங்கப்படுகின்றன. ஆனால் தொழிற்சாலைகளும் இல்லை. அவற்றை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளும் இல்லை என அவர் தெரிவித்தார். (நி-5)

## 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இராணுவத்திலிருந்து தப்பியோட்டம்

(கொழும்பு)

இலங்கையின் முப்படைகளிலிருந்தும் தப்பியோடிய ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களால் நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து மாதங்களில் முப்படைகளின் 140 அதிகாரிகள் உட்பட 15360 பேர் பாதுகாப்பு பிரிவிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

நாடு முழுவதும் கொலைகள் மற்றும் கும்பல் நடவடிக்கைகளுக்கு ஒப்பந்தக் கொலையாளிகளாக பாதாள உலக தலைவர்கள் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை வேலைக்கு அமர்த்துவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-5)

## மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 74.07 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 78.88 அமெரிக்க டொலராக நிலவுகிறது.


இதேவேளை உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.81 அமெரிக்க டொலராக அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. (நி-5)

## எரிவாயு விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

பண்டிகை காலத்தை கருத்திற் கொண்டு எரிவாயுக்களின் விலையில் திருத்தம் ஏற்படாது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ்தெரிவித்தார். அதன் படி 12.5 கிலோ நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 3565 ரூபாய் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## முட்டை இறக்குமதி நிறுத்தம்



(கொழும்பு)

இந்த வருடத்தோடு முட்டை இறக்குமதி நிறுத்தப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி-5)

## சா/த பரீட்சையில் சித்தியடைந்தோர் வீதம் கடந்த வருடத்தை விட அதிகரிப்பு

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இவ்வருடம் இடம்பெற்ற சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரத்திற்குத் தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையில் சாதகமான வளர்ச்சி காணப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மொத்த விண்ணப்பதாரர்களில் 428,299 பேர் இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றியிருந்ததுடன் சித்தியடைந்தோர் 90.54% வீதமானது மிகவும் சாதகமான நிலைமையாகும்.

கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த சதவீதம் படிப்படியாக அதிகரித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

## சில பொருட்களுக்கான விசேட பண்டவரி நீக்கம்

(கொழும்பு)

நாட்டில் சில பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த விசேட பண்டவரி நீக்கப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வர்த்தக வரிச்சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ் இந்த விசேட பண்டவரி நீக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வகையில் யோகட், வெண்ணை, பேரிச்சம்பழம், அப்பிள், தோடம்பழம் உள்ளிட்டவற்றுக்கு விதிக்கப்பட்டிருந்த விசேட பண்டவரியே நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## மீளாய்வு விண்ணப்பங்கள் நாளை முதல் கோரப்படும்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் (2022) பெறுபேறுகளின் மீளாய்வு விண்ணப்பங்கள் இம்மாதம் 4ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை கோரப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அனைத்து பாடசாலைகளினதும் விண்ணப்பதாரர்களின் அச்சிடப்பட்ட ஒற்றை பெறுபேறு ஆவணங்கள் அந்தந்த அதிபர்களுக்கு வழங்கப்படும் என்றும் அந்த விண்ணப்பதாரர்களின் முடிவுகளை மீளாய்வு செய்த பின்னர் பெறுபேறுகள் மீண்டும் வெளியிடப்படும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இருபது-20 உலகக்கோப்பை ஆட்டத்தில் கால்பதிக்கிறது உகண்டா



ஐ.சி.சி ஆடவருக்கான 2024 ஆம் ஆண்டுக்கான இருபது-20 உலகக்கோப்பையில் விளையாடும் ஐந்தாவது ஆபிரிக்க நாடு என்ற பெருமையை உகண்டா பெற்றுள்ளது.

அதுமாத்திரமல்லாமல் ஐ.சி.சி உலகக் கோப்பை போட்டியில் உகண்டா பங்கேற்கும் முதல் போட்டியும் இதுவாகும்.


2024 ஆம் ஆண்டுக்கான இருபது-20 உலகக்கோப்பையில் விளையாடும் வாய்ப்பைப் பெறுவதற்காக நடத்தப்பட்ட 6 போட்டிகளில் 5 இல் வெற்றியைப் பெற்று தனக்கான வாய்ப்பினை உகண்டா உறுதி செய்துள்ளது.

தகுதிச் சுற்றில் உகண்டா தனது முதல் ஆட்டத்தில் தான்சானியாவை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி, அடுத்த ஆட்டத்தில், நமீபியாவுடனான ஆட்டத்தில் 4/17 6 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது.

அதன் பின்னர் ஜிம்பாப்வே, நைஜீரியா, கென்யா, ருவாண்டா ஆகிய அணிகளுடனான ஆட்டங்களில் அமோக வெற்றியைப் பெற்ற உகண்டா ஐ.சி.சி ஆடவருக்கான 2024 ஆம் ஆண்டுக்கான இருபது-20 உலகக்கோப்பையில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டது.

மறுபுறம், நமீபியா மற்றும் உகண்டா அணிகளுடன் விளையாடி தோல்வியைத் தழுவிய ஜிம்பாப்வே அணி, இருபது-20 போட்டிகளில் விளையாடுவதற்கான வாய்ப்பினைத் தவறவிட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 07 . 1936

மறைவு 02 . 12 . 2023

**முருகேசு சுப்பிரமணியம்** (கராஜ் – வைரமுத்து)

**(அம்பிகை மோட்டோர் வேர்க்ஸ் உரிமையாளர்)**

நவிண்டில் சக்கலாவத்தை கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிரி கோட்டைத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (02.12.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், கதிர்காமு தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், மற்றும் காலஞ்சென்றவரான பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், பாலாம்பிகை, யசோதாம்பிகை(ஜேர்மனி), சுபாம்பிகை, யோகாம்பிகை (டென்மார்க்), சிவராமன் (ஜேர்மனி), செந்தில்வேல் (அவுஸ்ரேலியா), ஜனாதனா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (கந்தவனம்), கந்தையா (சதாசிவம்), செல்லம்மா, திருநாவுக்கரசு (கதிரவேல்) ஆகியோரின் இளைய சகோதரரும், தங்கம்மா, வள்ளிப்பிள்ளை, பொன்னையா, அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயபாலு (உரிமையாளர், ஜெயா ரெக்ஸ் நெல்லியடி), கீர்த்தன் (ஜேர்மனி), சண்முகலிங்கம் (டென்மார்க்), மணிமேகலை (ஜேர்மனி), சசிந்தினி (அவுஸ்ரேலியா), தணிகைவேள் (ஆசிரியர் யா/நெல்லியடி மத்திய கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமனாரும், பாரத் அஞ்சனா, உமைசுதன் பர்ஷா, கிருஷாயினி (அமரர்), டல்ஷிகா, நிகாஷன், சாரங்கா, ஜோதிகா, தேனுகா, அருண், லக்சனா, பிரவின் , டீபிகா, சமுத்திரா, துர்க்கா, பைரவி, தேஷ்னா ரோஹித் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04.12.2023) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்: குடும்பத்தினர்

077 124 0087

077 988 2160 (C-7788)


# ஓய்வில் கோலி

## அதிர்ச்சியில் ரசிகர்கள்



இந்திய அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரரான விராட் கோலி, சிறிது காலம் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற அனுமதி கோரியுள்ள விடயம் தற்போது பரபரப்பாக பேசப்படுகிறது.

கடந்த ஒன்றரை மாதமாக இந்தியாவில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நிறைவடைந்தவுடன், இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் பங்கேற்கும் இருபது-20 தொடர் நடைபெற்று வருகின்றது.

இந்த தொடரில் உலகக்கிண்ணத்தில் பங்கேற்ற பெரும்பாலான வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு, சூர்யகுமார் தலைமையில் இளம் வீரர்கள் விளையாடி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் தென் னாபிரிக்கா அணியுடன் ஒரு நாள், இருபது-20 மற்றும் டெஸ்ட் போட்டி களில் இந்திய அணி விளையாடவுள்ளது.

இந்த நிலையில் டிசெம்பர் 10 முதல் 21 வரை நடைபெறவுள்ள ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் இருந்து பி.சி.சி.ஐயிடம் விராட் கோலி ஓய்வு கேட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் டிசெம்பர் 26 ஆம் திகதி தொடங்கும் டெஸ்ட் போட்டிகளில் விராட் கோலி அணியில் இணைவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. உலகக் கிண்ண தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்து தொடர் நாயகன் விருதை விராட் கோலி வென்றது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## நீதியே...

ஆப்கானிஸ்தான் நாட்டின் கப்பல் போக்குவரத்து அமைச்சரவை போன்றே எமது நாட்டின் நீதி அமைச்சர் உள்ளார் என நான் கூறுவது வழக்கம். இம்முறையாவது அதனைச் சொல்லாமல் விடுவமோ என்று நினைத்தால் கடந்த சில நாட்கள் இந்த நாட்டில் இடம் பெற்றவைகளைப் பார்க்கும்போது நீதியே இல்லாத நாட்டில் ஒரு நீதி அமைச்சர் என்றே எனது பேச்சை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

நீதி இல்லாத நாடு எனச் சொல்வதற்குப் பிரதான காரணம் நாட்டிலே வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு விதமாக சட்டங்கள் பிரயோகிக்கப்படுகின்றது.

நீதி இல்லா நாட்டில் நீதி அமைச்சராக இருக்க உங்களுக்கு வெட்கம் இல்லையா என கேள்வி எழுப்பியிருந்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த மனநிலையை சிறுவர்களிடையே விதைக்க முயற்சி

## இனவாதம் கக்கும் சிங்களராவய

(கொழும்பு)

வடக்கில் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தினத்தின்போது, விடுதலைப் புலிகளைப் போல உடை அணிவித்து சிறுவர்களை அழைத்து வந்துள்ளனர். இதன் மூலம் யுத்த மனநிலையை சிறுவர்கள் மத்தியில் உருவாக்க முயற்சிக்கிறார்கள் என சிங்களராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் உள்ளன. இவற்றை பாதுகாப்பதற்கான சட்டங்கள் உள்ளன. இதற்கமைய, நீதிமன்ற உத்தரவின்றி, தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அழிக்கப்பட்டால், குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்ய முடியும். இவ்வாறாக கைது செய்யப்படுபவர்களை இலகுவாக பிணையில் விடுதலை செய்ய முடியாது.

எனினும் வடக்கு மற்றும் கிழக்கில் தற்போது பல தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. குறித்த பகுதியில் நீதி சரிவர செயற்படாதுள்ளது. அரசியல் காரணங்கள் காரணமாக குறித்த சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது.

இவ்வாறாக முன்னெடுக்கப்படும் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கை முப்படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் நீதி சரிவர நடைமுறைப்படுத்தப்படுவதை பாதுகாப்பு படையினர் உறுதி செய்ய வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# திருமலை கடற்கரையில் கரையொதுங்கும் மீன்கள்



(திருமலை)

திருகோணமலை-குச்சவெளி பிச்சமல் விகாரைக்கு அண்மித்த கடலில் டைனமைட் பாவனையால் அதிகளவான மீன்கள் இறந்து கரையோரத்தில் ஒதுங்கி காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை பிச்சமல் விகாரைக்கு அண்மித்த கடலில் பல வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் விபத்தில் இறந்த மீன்கள் கடற்கரையில் பெருமளவில் குவிந்து வருவதாகவும் இதனால் கரையோரப் பகுதி மிகவும் மாசடைந்துள்ளதாகவும்பிரதேசவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர். (நி-5)

# டயானா உட்பட மூவருக்கு பாராளுமன்ற அமர்வுக்கு தடை

## பிரேரணை நிறைவேற்றம்



(கொழும்பு)

டயானா. சுஜித் மற்றும் ரோஹன ஆகியோருக்கு பாராளுமன்ற அமர்வுக்கான தடை விதிக்கும் பிரேரணை 56 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான டயானா கமகே. சுஜித் சஞ்சய் மற்றும் ரோஹன பண்டார ஆகியோரின் பாராளு மன்ற அமர்வுகளுக்கு தடை விதிப்பது தொடர்பான தீர்மானத்திற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதன்படி குறித்த பிரேரணைக்கு ஆதரவாக 57 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் கிடைக்கப்பெற்றன.

3 பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இருந்து விலகியிருந்தனர். (நி-5)

# இலங்கைக்கு கிடைக்கவுள்ள 780 மில்லியன் அமெரிக்க டொலர்கள்

(கொழும்பு)

இலங்கைக்கு 780 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அடுத்த வாரத்திற்குள் கிடைக்கும் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையாக 330 மில்லியன் அமெரிக்க டொலர்களும் உலக வங்கியின் உதவியாக 250 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்களும் பெறப்பட உள்ளன.

சர்வதேச நாணய நிதியம் தொடர்பாக, கடனாளர் மறுசீரமைப்பு பாரிஸ் கிளப் மற்றும் சீனாவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கடனாளர் மறுசீரமைப்பின் ஒப்புதலின் காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழு டிசெம்பர் 14 ஆம் திகதி கூடவுள்ளது. இதன்போது இரண்டாம் தவணை கடன் வழங்குவது தொடர்பாக விவாதத்திற்கு தயாராகி வருகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை எதிர்வரும் டிசெம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் பெற்றுக்கொள்ளப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் உதவி கிடைத்த பின்னர் பொருட்களின் விலை சற்று குறையலாம் எனவும் நிதி அமைச்சு கணித்துள்ளது. (நி-5)

# 9 மாதகாலப் பகுதிக்குள் 2403 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

## நீதியமைச்சர் தகவல்

(கொழும்பு)

நிறைவடைந்த 9 மாத காலப்பகுதிகளில் நாடளாவிய ரீதியில் 2,403 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளதாகவும் இந்நிலைமை கவலைக்குரியதெனவும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பாராளுமன்றில் தெரிவித்தார்.

இதேவேளை, நீதிமன்ற கட்டமைப்பில் மாத்திரம் 11,4458 வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் நீதியமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# இராசிபலன்

03.12.2023
கார்த்திகை 17, ஞாயிற்றுக்கிழமை
சஷ்டி முன்னிரவு 8.05 மணிவரை

ஆயிலியம் முன்னிரவு 10.38 மணிவரை
சுபநேரம் -9.15-10.45 மணிவரை
இராகுகாலம்-4.45-6.15 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூராடம், உத்தராடம்.

வளவன்



மேஷம்

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.



ரிஷபம்

கௌரவமான நாள், எடுத்த காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள்.



மிதுனம்

உறவினர் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.



கடகம்

பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், நீங்கள் பார்க்க நினைத்த நண்பர் உங்களைத் தேடி வரலாம், சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.



சிம்மம்

திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், சுபவிரயங்கள் அதிகரிக்கலாம்.



கன்னி

திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்கள் வழியில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.



துலாம்

எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.



விருச்சிகம்

உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு, தொலைபேசி வழியில் வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.



தனுசு

திட்டமிட்ட காரியங்களில் சிறுதடை தாமதங்கள் ஏற்படலாம், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படும் வாய்ப்புண்டு, கௌரவக்குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம்.



மகரம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



கும்பம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், கௌரவமான நாள்.



மீனம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவைகள் பூர்த்தியாகும்.

நகைச்சுவை பக்கவிளைவுகள் எதுவுமில்லாத அரிய மருந்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் - மாதகல் சம்புநாத ஈச்சரத்தில் சைவ மகா சபையினால் கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் அமைக்கப் பெற்ற சிவபெருமானின் தியான திருவுருவம் தற்போது மீளவும் வர்ணம் தீட்டப்பெற்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திருக்குடமுழுக்கு செய்யப்பட்டது.

(படம்: சிவசாந்தன்)

# பண்பாட்டுப் பெருவிழாவும் காண்பியக்கூடக் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு நடத்தும் வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா கிளிநொச்சி கூட்டுறவாளர் கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். காண்பியக்கூடக் கண்காட்சியானது 6 ஆம் மற்றும் 7 ஆம் திகதிகளில் கிளிநொச்சி கூட்டுறவாளர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.(நி-5)

## நாவலர் பெருமான் நினைவு வைபவம்

(யாழ்ப்பாணம்)

நல்லை நகர் நாவலர் பெருமான் நினைவு வைபவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி .ஆறுதிருமுருகன் தலைமையில் நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (நி-5)



யாழ்ப்பாணம்-கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஒளி விழா நேற்றுமுன்தினம் கலாசாலையின் அதிபர் மௌலிசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

(படங்கள்: கஜிந்தன், சிவசாந்தன்)

# மயங்கிய நிலையில் மீட்கப்பட்ட மீனவர்

(கரணவாய்)

சுப்பர்மடம் கடலில் படகு விபத்துக்குள்ளானதில் மயங்கிய நிலையில் மீனவர் ஒருவர் நேற்று சனிக்கிழமை காலை மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த குமரகுருசாமி - அருநேசராசா (43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான மீனவரே இவ்வாறு கடலில் விழுந்து மயங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளவராவார்.

கடும் கடற்கொந்தளிப்பு காரணமாக பாரிய கடல் அலையில் சிக்கிய குறித்த படகின் வெளியிணைப்பு இயந்திரம் கழன்று கடலில் வீழ்ந்துள்ளது.

இதன்போது குறித்த மீனவரும் கடலில் விழுந்துள்ளார்.

இதையடுத்து சக மீனவர்கள் விரைந்து சென்று அவரை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.(நி-5-60)

# கடற்றொழில் சங்கங்களுக்கு குளிர்சாதனப் பெட்டிகள்

## இந்திய தூதுவரால் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் அண்டிய பகுதிகளில் உள்ள 15 கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு இந்திய தூதுவரால் குளிர்சாதனப் பெட்டிகள் வழங்கப்பட்டிருந்தன.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பாஷையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்வில் குளிர்சாதனப்பெட் டிகள் வழங்கப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்திலுள்ள மீனவர்களின் நலன்களுக் காக வடமாகாணத்தில் வணிக மற்றும் ஸ்திரமான மீன்பிடித்துறையை மேம்படுத்துவதற்காக விஞ்ஞான பூர்வமான வழிகளைப் பயன்படுத்துவதற்கான கலந்துரையாடல்களிலும் இந்தியா ஈடுபட்டுள்ளதாக தூதுவர் இங்கு குறிப்பிட்டார்.

இதன்போது யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் உள்ளிட்ட இந்திய தூதரக உயர் அதிகாரிகள், கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-5-33)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வழங்குநர்களை பதிவு செய்தல்-2024

எமது சபையினால் 2024 ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள். சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருட்கள்**

01. காகிதாதிகள், எழுதுபொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
03. சித்த மருத்துவ மருந்துகள்
04. நூலகங்களுக்கான நூல்கள்
05. துணி வகைகள்
06. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்)
07. கற்கள், மணல்கள்
08. தீந்தை வகைகள் (Paints) நிறம் தீட்டும் பொருட்கள்
09. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
11. மின்வழங்கு பொருட்கள் மின்பாவனைப் பொருட்கள்
12. எரிபொருள்,உராய்வு நீக்கி
13. இரும்புப் பொருட்கள்
14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
15. பனைமரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. கணனி பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமிநாசினிகள்
19. பாதணிகள், தோல் பொருட்கள், மழை அங்கிகள்
20. அலங்காரப் பொருட்கள்
21. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல், பதாகைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
02. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
04. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
05. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடல்
06. மின்சாதனங்களின் திருத்தம், மீள மின்வலுவூட்டல்
07. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
08. வாகனங்கள் சுத்திகரிப்பு
09. கோலவுடை தைத்தல்
10. கணனி பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
12. வீதி கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை

விண்ணப்பமானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா.1000.00(வரிகள் நீங்கலாக) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2024"** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **செயலாளர், தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 31.01.2024 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 024 324 3544 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.** (சி-7783) 03.12.2023.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 417
Viber 076 636 3378



# நினைவேந்தும் உரிமையை எவராலும் தட்டிப்பறிக்க முடியாது

**மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு அனுமதித்தவர்கள், மாவீரர் துயிலுமில்லங்களை இடித்தழித்து விட்டு அதன்மேல் கட்டப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்றி அங்கு நினைவேந்த அனுமதிக்க வேண்டும். அதுவே உண்மையான நினைவேந்தும் உரிமையாகும்.**

2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டதாய் இலங்கை அரசு சர்வதேசத்திற்கு அறிவித்தல் விடுத்திருந்தது.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதாய் இலங்கை அரசு அறிவித்திருந்தாலும் அந்தப் போரில் அதிகம் கொல்லப்பட்டவர்கள் அப்பாவித் தமிழ் மக்களே என்பது சர்வதேசத்திற்கும் நன்கு தெரியும். ஆயினும் சர்வதேசம் அது விடயத்தில் அதிகம் கரிசனை காட்டவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வுகள் நடைபெறும் காலங்களில் மட்டும் இலங்கைக்கு எதிராக பிரேரணைகளை எழுப்புவது வழமையான விடயமாகி விட்டது.

இது; தாழமுக்கம், புயல்,மழைக்கு வாய்ப்பு என காலநிலை அவதான நிலையம் அறிவித்திருந்த நிலையில் அவ்வாறு எதுவும் நடக்காமல் போவது போன்ற விடயமே. இதுவும் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

வன்னிப் பெருநிலப் பரப்பின் கொடூரங்கள் சொல்லிமாளாது. அந்தளவுக்கு தமிழினம் மிகப் பெரும் கொடூரத்தை அனுபவித்துவிட்டது.

பாதுகாப்பான இடம் என அடையாளப்படுத்தி அங்கு மக்களை அனுப்பிவிட்டு அதில் குண்டு போட்டால் எப்படியிருக்கும் நிலை?

இறந்த உடல்களை எரிக்கவோ, புதைக்கவோ எவருக்கும் அவகாசம் இல்லை. அந்தளவிற்கு குண்டு மழை பொழிந்தவண்ணமே இருந்நது.

கண்முன்னே தாய், தந்தை இறந்து போக அவர்களுக்கு இறுதிக்கிரியை செய்யக்கூட அவகாசமின்றி மீண்டு வந்த பிள்ளையின் மனநிலை எப்படிப்பட்டதாய் இருக்கும் என்பதை பேரின வாத அரசுகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

துரதிஷ்டம், போரில் உயிரிழந்த அனைவரும் பயங்கரவாதிகளே என இலங்கை ஆட்சியாளர்கள் அறிக்கையிட்டதுடன் எல்லாம் முடிந்து போனது.

போர் நிறைவுற்ற பின்னரேனும் தமிழினத்துக்கான தீர்வு தரப்பட்டதா எனின் அதுதான் இல்லை.

வருடக் கணக்காக தமிழினத்தை முட் கம்பி வேலிக்குள் அடைத்து விசாரணைக் குட்படுத்தி மனரீதியாக துன்புறுத்தி அவர்களை விடுதலை செய்வதைக் கூட அரசியலாக்கி அதில் ஆதாயம் தேட நினைத்தவர்களின் மனக் கொடூரம் மிக மோசமானதே.

முட்கம்பி வேலி முகாம்கள் மூடப்பட்ட பின்னராவது தமிழினத்துக்கான உரிமைகள் தரப்படும் என்றால் அதுதான் நடந்தாகவில்லை.



அதுவரை ஒரே குடையின் கீழ் நின்ற தமிழ் தலைமைகள் பிரிந்து தமக்கேற்றால்போல் செயற்படத் தொடங்கினர்.

இது தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைக்கும் வகையிலேயே இருந்தது.

விலைபோகத் தடைப்பட்ட அரசியல்வாதிகள் நிறைந்திருக்கும் தமிழ்பரப்பில் நிலையான தலைமை ஒன்றின் வெற்றிடம் இன்றுவரை நிலவவே செய்கிறது.

இவர்கள் தமிழர்களின் உரிமை விடயத்தில் மழைக்கால வீட்டில் பூச்சிகளாய் செயற்படத் தொடங்கின.

வடக்கிற்கு ஒரு முகத்தையும் தெற்கிற்கு இன்னொரு முகத்தையும் காட்டவல்ல கைங்கரியத்தை இன்றுவரை மிகத் திறம்படச் செயற்படுத்தி வருகின்றனர்.

இது பெரும்பான்மை ஆட்சியாளர்களுக்கு சாதகமான விடயமாகவே காணப்படுகிறது.

தமிழர் உரிமை, தமிழர் அரசியல் அபிலாஷை என்பன தேர்தல் காலங்களில் உச்சரிக்கப்படும் சொல்லாடலாக மாறிப் போயின.

தமிழ் அரசியல் தலைமை இடைவெளியே இன்றுவரை தமிழினத்திற்கு தீர்வு கிடைக்காததற்கு காரணமும் எனலாம்.

நிலை இதுவாக இருக்கையில் கடந்த 27 ஆம் திகதி மாவீரர் தினம் வடக்கு - கிழக்கில் மிகப் பெரும் உணர்வுபூர்வமாக நடந்திருக்கின்றன.

வழமை போன்று பெரும் கெடுபிடிகள் இம்முறை குறைவடைந்திருந்ததோடு பாதுகாப்புத்தரப்பின் பெரும் பிரயத்தனமும் நீதிமன்றங்களில் நிராகரிக்கப்பட்டிருந்தன.

இதன் வெளிப்பாடு மக்கள் அச்சமின்றி வீடுகளிலிருந்து மாவீரர் துயிலும் இல்லங்களுக்கும் மாவீரர் நினைவேந்தல் திடல்களுக்கும் சென்று தீபமேற்றி மண்ணுக்காய் மரணித்த நமது உறவுகளுக்கு அஞ்சலித்தனர்.

மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பில் பேசிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைவேந்தும் உரிமையை எவரும் தட்டிப் பறிக்க முடியாது எனக் கூறியிருந்தார்.

இது தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்கத்தக்க விடயமாக இருந்தாலும் வடக்கில் இருக்கும் பல மாவீரர் துயிலும் இல்லங்கள் இடித்தழிக்கப்பட்டு அதன்மேல் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் ஜனாதிபதி கரிசனை கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

தமிழ் மக்களின் விடிவுக்காய் போராடிய மாவீரர்களின் கல்லறையினை இடித்தழித்து அதன்மேல் இராணுவ முகாம்களை அமைத்திருப்பதென்பது தமிழ் மக்களின் மனங்களில் மிகப் பெரும் துயரத்தையே ஏற்படுத்தியுள்ளது.

நினைவேந்தும் உரிமையை எவரா லும் தட்டிப் ப்றிக்க முடியாது எனப் பேசிய ஜனாதிபதி மாவீரர் துயிலும் இல்லங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி அதில் நினைவேந்தலை மேற்கொள்ளும் நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும்.

அவ்வாறு நடந்தால் மாத்திரமே அது ஜனாதிபதியின் பேச்சிற்கு உயிர்வடிவம் கொடுப்பதாய் அமையும்.


தமிழ் இளைஞர்கள் இனி போராட்டம் பற்றி சிந்திக்கமுடியாதபடி தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட போதை விதைப்பு அரசிற்கு ஓரளவு வெற்றி அளித்திருந்தாலும் அது தமிழர் கலாசாரத்தில் பெரும் பிறழ்வை ஏற்படுத்தவில்லை என்பதே உண்மையானது.

நடந்து முடிந்த மாவீரர் நாள் நினைவெழுச்சி அதை பறைசாற்றி நிற்கிறது.

**அபிமன்யு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



**யா/வேம்படி மகளிர் கல்லூரியில் 115 மாணவிகள் 9 ஏ சித்தி**

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் அனைவரும் அமர்ந்ததும், சாத்திரியார் சதாசிவம் எல்லோருக்கும் கன்டோஸ் கொடுத்தார்.

என்ர பேத்திக்கு 9 ஏ கிடைத்திருக்குது. யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில படிக்கிறா எனக் கூறிக் கொண்டார்.

**பண்டிதர்:-** ஓ! இந்த முறை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில 115 பிள்ளைகள் 9 ஏ உம் 59 பிள்ளைகள் 8 ஏ யும் பெற்றிருக்கினம். உண்மையில் இது மிகப் பெரிய சாதனை.

**மூப்பர்:-** அப்ப யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில எத்தனை பேருக்கு 9 ஏ.

**பண்டிதர்:-** அங்க 74 மாணவர்களுக்கு 9 ஏ யும் 73 மாணவர்களுக்கு 8 ஏயும் கிடைத்திருக்குது.

**கங்காணி:-** பொதுவில சாதாரணதரப் பரீட்சைகளில பெண் பிள்ளைகள் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளுவினம். அதேநேரம் உயர்தரத்தில பெடியள் மற்ஸ், சயன்ஸ் எண்டு உச்சமான றிசல்ட்டைத் தங்களுக்காக்கிப் போடுவினம்.

இதற்கு எங்கட வேம்படி மகளிர் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் நல்ல எடுத்துக்காட்டு.

**விதானையார்:-** என்னைப் பொறுத்தவரையில, இப்ப 9 ஏ, 8 ஏ எடுக்கிறதென்பது அவ்வளவு கடினமான விடயமல்ல.

எனவே வடபகுதியில இருக்கிற எல்லாப் பாடசாலைகளும் மாணவர்களை இந்த நிலைக்குக் கொண்டு வர வேணும். இதில அந்தந்தப் பாடசாலை நிர்வாகங்கள் அதிகூடிய கவனம் எடுக்க வேணும்.

**வாத்தியார்:-** வேம்படி மகளிர் கல்லூரியில 115 பிள்ளைகள் 9 ஏ எடுத்திருக்கினம். ஆனால் அங்க போதிய கட்டட வசதி இல்லாததால, இப்ப பரீட்சைப் பெறுபேறு வந்த மாணவர்களுக்கு இன்னும் உயர்தர வகுப்பை ஆரம்பிக்க முடியாமல் உள்ளது.

**சிறாப்பர்:-** உண்மைதான். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில 2022 ஆம் ஆண்டில சாதாரணதரப் பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு உடனேயே ஏ.எல் ஆரம்பிக்கப்பட்டு, இப்ப ஆறு மாதங்கள் கடந்து விட்டன.

ஆனால் இன்னமும் வேம்படி மகளிர் கல்லூரியில ஏ.எல் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகையால, வேம்படி மகளிர் கல்லூரிக்குத் தேவையான கட்டட வசதிகளை அரசதரப்பும் பொது அமைப்புக்களும் நலன்விரும்பிகளும் பழைய மாணவர்களும் சேர்ந்து செய்ய வேணும்.

இல்லையெண்டால் ஓ.எல் பரீட்சையில உயர் பெறுபேற்றை எடுத்த பிள்ளைகளால ஏ.எல் பரீட்சையில சாதிக்க முடியாமல் போய்விடும்.

ஆகையால, இது விடயத்தில எங்கட கல்விச் சமூகம் அதீத கவனம் செலுத்த வேணும்.

இவ்வாறு சிறாப்பர் கூற, ஆலடியில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** யாழ்ப்பாணத்தில உள்ள ஒரு பிரபல தொழிலதிபரின்ர பிறந்தநாள் நேற்று (02) நடந்தது. அதில உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன. அந்த உதவிப் பொருட்களை வாங்குவதற்காக ஏகப்பட்ட மக்கள் வரிசையில காத்து நின்றினம்.

அதைப் பார்த்த போது மிகுந்த வேதனையாக இருந்தது. பிறந்தநாளில் உதவிப் பொருட்கள் வழங்குவது அந்தத் தொழிலதிபரின் நல்ல குணம்.

ஆனால், அந்த உதவிப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு இத்தனை பேர் வரிசையில நிண்டினம் என்பது தான் வேதனைக்குரிய விடயம். அதிலும் இளம் ஆட்கள் வரிசையில காத்து நின்றினம்.

இந்த நிலைமை, மற்றவர்களிடம் எதிர்பார்க்கின்ற மன நிலை எங்கட மண்ணில அதிகரித்து விட்டதோ என்ற நினைப்பை ஏற்படுத்தியிருந்தது.

உண்மையில மற்றவர்களிடம் எதிர்பார்க்கின்ற மன நிலை எங்களை மிக மோசமான நிலைக்குக் கொண்டு வந்து விடும்.

ஆகையால, சொந்தக் காலில நிற்கின்ற தைரியத்தை - நம்பிக்கையை கட்டாயம் நாங்கள் ஏற்படுத்த வேணும். இப்ப ஒரு ஆம்பிளை கூலிக்குப் போனால் குறைந்தது 3 ஆயிரம் ரூபா கிடைக்கும்.

ஆனால் அப்படி வேலை செய்யிற நேரத்தை விட, அதிகூடிய நேரத்தைச் செலவிட்டு வரிசையில நிண்டு 5 கிலோ அரிசியைப் பெறுவதில் நாங்கள் அக்கறையாக இருக்கிறம் எண்டால், அதின்ர பொருள் என்ன?

கஷ்ட துன்பங்கள் இருக்கலாம். ஆனால் முடிந்தளவில எங்கட சொந்தக் காலில நிற்கப் பழக வேணும்.

அந்த மனநிலையை சிதைக்கின்ற எந்தக் காரியத்தையும் எவரும் செய்யக் கூடாது. ஏனெண்டால், எல்லோரும் மதிப்புக் குரிய மனிதர்கள். ஆகையால, இது பற்றி அனைவரும் சிந்திக்க வேணும்.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல் ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டா மணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவீரர்களின் கல்லறைகளை அழித்து அதன் மேல் இராணுவ முகாம் அமைத்துக் கொண்டு, நினைவேந்த உரிமை உண்டு எனக் கூறுவதற்குள் இருக்கும் பொருள் என்ன?

**நிதிஸ் யாழ்ப்பாணம்**

**காதலித்துவிட்டு இடையில் ஏன் கைவிட்டு செல்கிறார்கள் வியாசரே?**

மகி நூடில்ஸ் ஐந்து நிமிடங்களில் ரெடி யாகிவிடும். இந்த இளவு பிடித்த காதல் ஒரு நொடியிலேயே ரெடியாகி விடுகிறது போல.
அது தான் அதன் ஆயுளும் குறைவு . பள்ளிக்காதல் படலைவரை, வீதிக் காதல் ஒழுங்கை வரை, கடற்கரைக் காதல் மணல்மேடு முடியும் வரை, பல்கலைக்கழகக் காதல் பட்டம் பெறும் வரை, பார்த்தவுடன் காதல் கறுமம் சொல்ல முடியாது வரையறை.

**திகான் வடமராட்சி**

**ஒரு இனம் தனது இலட்சியத்தை அடைய அயராது முயற்சித்தால் போதுமா வியாசரே?**

இலட்சியம் இல்லாத இனம் இனமே இல்லை. அது வெறும் சனமே.
இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் எந்தத் தடை வந்தாலும் எத்தனை உயிர் வீழ்ந்தாலும் முன்னேறிச் சென்று கொண்டே இருக்க வேண்டும்.
எமது முன்னேற்றம் எதிரிக்கு பயத்தை ஏற்படுத்தும். அவனின் மனோ பலத்தை பாதிக்கும்.
அது எமக்கான வெற்றியை ஈட்டித் தரவல்லதாய் அமையும்.
தமிழினம் ஒரு காலத்தில் அப்படிப்பட்ட இலட்சியப் பயணத்தில் இருந்தது. இன்று அதன் பாதை மாற்றப்பட்டு விட்டது என்பது தான் வேதனையானது.

**ராம்சரன் மந்துவில்**

**பயங்கரமழை பெய்கிறதே போகிற போக்கு அழிவுக்கான பாதையா வியாசரே?**

இயற்கையை மதிக்கவேண்டியது எம் ஒவ்வொருவருடைய கடமை.
அவ்வாறு மதிக்காமல் விட்டோமாக இருந்தால் அது எம்மை ஏறி மிதித்துச் சென்றுவிடும்.
இந்த உலகம் மனிதனுக்கானது என்ற தோரணையில் மனிதன் இயற்கையை கடுமையாகச் சீண்டுகின்றான்.
இதுவே இப்போதைய இயற்கை மாற்றத்துக்கான காரணம்.
உதாரணத்திற்கு இந்த உலகில் உள்ள மொத்த எறும்புகளும் ஒன்று சேர்ந்து மனிதனை எதிர்த்தால் மனிதனின் நிலையை எண்ணிப்பாருங்கள்.
மனிதனின் கதை அவ்வளவு தான்.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**மதுவன் மீசாலை**

**சித்தன்கேணி இளைஞனின் படுகொலைக்கான நீதி கிடைக்குமா வியாசரே?**

சித்தன்கேணி இளைஞனின் படுகொலை தொடர்பில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளி வந்து கொண்டிருக்கின்றன.
பொலிஸ் பாதுகாப்பில் இருந்த ஒரு இளைஞன் மீது கொடும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது அங்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் யாரும் இருக்க வில்லையா? அவ்வாறு இருந்திருந்தால் அக்கொடும் தாக்குதல் தடுக்கப்பட்டிருக்கு மல்லவா?
கொலை விடயம் பெரும் விடய மானதால் விசாரணைகள் துரி தப்படுத்தப்பட்டிருக்கின்றன.
கைதுகள் நடந்திருக்கின்றன.
இந்த வேகம் அந்த வழக்கு முடியும் வரை இருந்தால் மிகச்சிறப்பு.



பயங்கரமழை பெய்கிறதே போகிற போக்கு அழிவுக்கான பாதையா வியாசரே?

**தரணிதரன் விசுவமடு**

**காதலின் தவிப்பை வியாசர் உணர்ந் ததுண்டா?**

கடையில் மிதிவெடியை வாங்கி சாப்பிட தொடங்கும் போது நண்பன் வருவான். சரி அவனுக்கு பாதியைக் கொடுப் போமே என்று மிதிவெடியை பாதியாய் பிய்த்துவிட்டு இதில் எந்தப்பக்கம் இறைச்சி,முட்டை இருக்கிறது என்ற தவிப்பை நீங்கள் எப்போதாவது உண ர்ந்ததுண்டா?
உணர்ந்து பாருங்கள் அதன்பின் வேறு எந்தத் தவிப்பும் பெரிதாய் தெரியாது.

**சுதன் குப்பிழான்**

**மாவீரர்களின் கல்லறைகளை அழி த்து அதன் மேல் இராணுவ முகாம் அமைத்துக் கொண்டு, நினைவேந்த உரிமை உண்டு எனக் கூறுவதற்குள் இருக்கும் பொருள் என்ன?**

மண்மீட்புப் போரில் மடிந்து போனவர் கள் எம் உறவுகள் என்பதை முதலில் பேரினவாதம் புரிந்து கொள்ள வேண் டும்.
அவர்கள் தாய் நாட்டை மீட்டெடுக்கும் நோக்குடனேயே தம் உயிரை ஈகம் செய் தார்கள் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.
மாவீரர்களை நினைவுகூருவது உங்க ளுக்கு பயங்கரவாதமாகத் தெரியலாம். அது எங்களுக்கு உணர்வுபூர்வமானது. அந்த உணர்வுபூர்வம் மிகவும் புனித மானது. வில்லன்களில் இரண்டு வகை யுண்டு. ஒன்று ரகுவரன் போன்ற சைலண்ட் வில்லன். இன்னொன்று மஞ்சூர் அலிகான் போன்ற அலப்பறை வில்லன்.

**தமிழ் யாழ்ப்பாணம்**

**இம்முறை மாவீரர் எழுச்சி எப்படி இருந்தது வியாசரே?**

இம்முறை அல்ல ஒவ்வொரு மாவீரர் நினைவு நாளிலும் தமிழர் தம் இதயங் களில் தீபமேற்றி மண் மீட்புக்காய் மடிந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்திக் கொண்டு தான் இருக்கிறார்கள்.
தமிழ் இனம் இருக்கும் வரை மாவீரர் களின் நினைவும் இருந்து கொண்டே இருக்கும்.
தீபம் ஏற்றுவதற்கும் ஒன்று கூடுவத ற்கும் தடை விதிக்கலாம். ஆனால் மனங்களில் நினைவுகூருவதை எவ ராலும் தடுக்க முடியாது. இம்முறை கெடுபிடிகள் சற்று குறைவென்பதால் மக்கள் அதிகமாக ஒன்று கூடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: பாசமலர்
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடல்: மயங்குகிறாள் ஒரு மாது
பாடியவர்: பி.சுசீலா



பார்வையில் ஆயிரம் கதை சொல்லுவாள்
படிதவள் தான் அதை மறந்துவிட்டாள்
காதலை நாணத்தில் மறைத்துவிட்டாள்
காதலை நாணத்தில் மறைத்துவிட்டாள்

மயங்குகிறாள் ஒரு மாது
தன் மனதுக்கும் செயலுக்கும் உறவு இல்லாது
மயங்குகிறாள் ஒரு மாது
திருவாய் மொழியாலே
திருவாய் மொழியாலே அத்தான் அத்தான்
என்றால் நெஞ்சம் உருகாதா
திருவாய் மொழியாலே அத்தான் அத்தான்
என்றால் நெஞ்சம் உருகாதா
மயங்குகிறாள் ஒரு மாது
தன் மனதுக்கும் செயலுக்கும் உறவு இல்லாது
மயங்குகிறாள் ஒரு மாது

தோழியர் கதை சொல்லி தரவில்லையா
துணிவில்லையா பயம் விடவில்லையா
தோழியர் கதை சொல்லி தரவில்லையா
துணிவில்லையா பயம் விடவில்லையா
நாழிகை செல்வதும் நினைவில்லையா
நாழிகை செல்வதும் நினைவில்லையா
அன்பே அன்பே அன்பே அன்பே
அத்தான் அத்தான் என்றால்
நெஞ்சம் உருகாதா
மயங்குகிறாள் ஒரு மாது
தன் மனதுக்கும் செயலுக்கும் உறவு இல்லாது
மயங்குகிறாள் ஒரு மாது

பார்வையில் ஆயிரம் கதை சொல்லுவாள்
படிதவள் தான் அதை மறந்துவிட்டாள்
காதலை நாணத்தில் மறைத்துவிட்டாள்
காதலை நாணத்தில் மறைத்துவிட்டாள்
அன்பே அன்பே அன்பே அன்பே
அத்தான் அத்தான் என்றால்
நெஞ்சம் உருகாதா
மயங்குகிறாள் ஒரு மாது
தன் மனதுக்கும் செயலுக்கும் உறவு இல்லாது
மயங்குகிறாள் ஒரு மாது
ஹஹ் ஹஹ் ஹா...

# எண்ணங்களை சாட்சியாய் பாருங்கள்

இந்த உலகில் இரண்டு விதமான மனிதர்கள் வாழ்கின்றார்கள். ஒன்று தங்கள் மன அமைப்போடு சேர்ந்து பயணித்து அதன் ஏவல்ப்படி உலகியல் சார்ந்து வாழும் மனிதர்கள்.

மற்றையவர்கள் தங்கள் உண்மை இயல்போடு ஒன்றித்து தங்கள் ஆன்மாவை அனுபூதியில் கண்டு உணர்ந்து தெளிந்து வாழும் மனிதர்கள்.

இதில் இரண்டாம் தரத்தில் உள்ள மனிதர்கள் கோடியில் ஒருவராகவோ அல்லது இருவராகவோதான் நிச்சயம் இருக்க முடியும்.

எண்ணங்களை குவியல்களாகக் கொண்ட மனஅமைப்பில் மட்டும் வாழத் தெரிந்த மனிதர்கள் எளிதில் உலகியலோடு பற்றுள்ளவர்களாக மாறிவிடும் அதே சந்தர்ப்பத்தில் கர்ம பந்தத்துக்குள்ளும் தாங்களாகவே கட்டுண்டு போய் விடுவார்கள்.

இந்த உலகியல் மனிதர்கள் படைக்கும் பிரம்மா போலவும் காக்கும் விஷ்ணு போலவும் தங்கள் மன அமைப்பில் திடீரென புதிய எண்ணங்களை படைத்துக் கொண்டும் அதை காத்துக் கொண்டும் உலகியலை இஷ்டம் போல் அனுபவிக்க முற்படுவர்.

அதாவது புதிய எண்ணங்களை படைத்தல் அல்லது உருவாக்குதல். புதிதாக உருவாக்கிய எண்ணங்களை காத்தல் அல்லது உயிர் கொடுத்து காப்பாற்றுதல். இவையிரண்டும் முறையே பிரம்மா, விஷ்ணு செயல்களாகும்.

இருந்தும் தங்களால் படைத்து, காத்த எண்ணங்களின் குவியல்களை அழிக்கும் சிவன் போல் இந்த மனிதர்கள் அழிக்கும் நுட்பமும் ஞானமும் அறவே அறியாதவர்களாகவே கர்ம பந்தத்துக்குள் இன்று வரை உழன்று வாழ்கின்றார்கள்.

ஆனால் எண்ணங்களின் தொகுப்பான மன அமைப்புக்குள் வாழாமல் அதன் எல்லைக்கு வெளியே பேரானந்தத்தை தம் உள்ளுணர்வுக்குள் அனுபவிக்கும் மனிதர்கள் புதிய எண்ணங்களை படைக்கவோ அல்லது உருவாக்கவோ இருக்கும் எண்ணங்களுக்கு உயிர் கொடுத்து அதை காப்பாற்றவோ சிறிதும் விரும்பாமல் அதில் இருந்து விலகி தங்கள் உண்மை இயல்போடு என்றும் சாட்சியாயிருக்க முயற்சிப்பார்கள்.

ஆனால் வைராக்கிய மனம் படைத்த சில தத்துவ ஞானிகள் மட்டுமே அழிக்கும் சிவன் போல ஏற்கனவே இருக்கும் எண்ணங்களை நிரந்தரமாக அழிக்கும் முயற்சியின் நுட்பத்தில் கைவரப் பெற்றவர்கள் எனலாம்.

அதாவது முள்ளை முள்ளால் எடுத்து பின் இரண்டு முற்களையும் வீசி எறிவதுபோல் ஒரு வைராக்கிய எண்ணத்தால் பிற எண்ணங்களை அழித்து பின் அந்த வைராக்கிய எண்ணத்தையும் முற்றாக அழிக்கும் செயலாகும். இவர்களே "நான் கடவுள்" என்ற தத்துவ நிலையில் என்றும் நங்கூரமிட்டு இருப்பவர்கள்.


மனித மனதில் எண்ணங்களை நிரந்தரமாய் அழிப்பதும் அதனோடு உறவாடாமல் நிரந்தரமாய் விலகியிருந்து அதை சாட்சியாய் பார்ப்பதும் ஒன்றுதான். தன் உண்மை சுயத்தோடு எப்போதும் ஒன்றித்து இருக்கும் வரை இது பெரும்பாலும் சாத்தியப்படக் கூடிய ஒன்றே.

அதனால்தான் ஆன்ம ஞானிகள் பெரும்பாலும் முத்தொழிலும் புரியும் மூம்மூர்த்திகளின் மாய வலைக்குள் அகப்படாமல் எண்ணங்களை சாட்சியாய் மட்டும் பார்த்துக் கொண்டு எவரும் உணராத பேரானந்த நிலையில் எப்போதும் தனித்து இருக்கின்றார்கள்.

ஏனென்றால் மனதில் எழும் எண்ணங்களை அழிக்க முற்படுவது கூட, புதிய எண்ணங்களின் உருவாக்கத்திற்கு வழி வகுத்து விடும் என்பது சில ஆன்ம தத்துவ ஞானிகளின் கருத்தாய் இன்று வரை இருக்கின்றது.


ஆனபடியால் தன்னை யார்..? என உணர விரும்பும் ஒவ்வொரு மனிதனும் தன்னுள் உருவாக்கம் பெறும் எண்ணங்களை காப்பாற்றவோ அல்லது அழிக்கவோ முற்படாமல் அந்த எண்ணங்களை சாட்சியாய் மட்டும் பார்ப்பதே எண்ணங்களின் தொகுப்பான மனதிலிருந்து தன்னை பிரித்தறியும் நுட்பத்தை இலகுவாகப் பெற முடியும்.

சாம் - ரமேஸ்குமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புல் சாப்பிடும் டென்னிஸ் வீரர்!



டென்னிஸ் உலகின் 'சம்பவக்கார நாயகன்' செர்பியாவின் நோவக் ஜோகோவிச். பல வரலாற்றுச் சம்பவங்களைத் தனது ஆட்டத்தின் வழியே நிகழ்த்தியுள்ள இவர், சமீபத்திய ஏ.டி.பி பைனல்ஸ் தொடரிலும் சம்பியன் ஆகி சர்வதேசத் தரவரிசையில் தொடர்ந்து 11ஆவது வாரமாக முதலிடத்தில் நீடிக்கிறார். இதன்படி, மொத்தம் 400 வாரங்கள் முதலிடத்தில் இருந்து சாதனை படைக்கும் முதல் நபர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். இவரைப் பற்றிச் சில தகவல்கள் இங்கே...

**புல் விரும்பி**

இதுவரை ஏழு விம்பிள்டன் பட்டங்களை வென்றுள்ளார். விம்பிள்டன் போட்டியின் ஒவ்வொரு வெற்றிக்குப் பிறகும் அந்த மைதானத்தின் ஒற்றைப் புல்லை எடுத்துச் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். இது இவரது சென்டிமென்ட்டாம்.

**பல மொழி அறிஞர்**

நோவக்குக்கு 11 வெவ்வேறு மொழிகளைப் பேசத் தெரியும். செர்பியன், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன், இத்தாலிய மொழிகளில் சரளமாகப் பேசக்கூடியவர். இவை தவிர, ஸ்பானிஷ், மாண்டரின், அரபு, ரஷ்யன், போரத்துக்கீஸ், ஜப்பானிய மொழிகளையும் அறிந்தவர்.

**புத்தகப் புழு**

டென்னிஸ் கோர்ட்டுக்கு வெளியே தனது அதிகமான நேரத்தை புத்தகங்கள் படிப்பதற்காகச் செலவிடுகிறார். ஒவ்வொரு போட்டியின் போதும் குறைந்தது 10 புத்தகங்களையாவது கையில் எடுத்துச் செல்கிறார். அப்போதைய மனநிலையின் அடிப்படையில் ஒரு புத்தகத்தைத் தேர்வு செய்து படிப்பாராம்.

**கால்பந்துப் பிரியர்**

கால்பந்து ரசிகராக இருப்பதுடன் இவருக்கு நன்கு விளையாடவும் தெரியும். செர்பிய கால்பந்து கிளப் ரெட் ஸ்டார், இத்தாலிய கிளப் ஏசி மிலன் மற்றும் போர்த்துக்கீசிய கிளப் பென்ஃபிகா ஆகியவற்றில் விளையாடியுள்ளார். மிகவும் பிடித்த கால்பந்து வீரர், இவரின் நண்பர் ஸ்லாடன் இப்ராஹிமோவிக்.

**திரையில் கொஞ்சம்**

ஹாலிவுட் திரைப்படமான தி எக்ஸ்பெண்டபிள்ஸ் 2இல் கேமியோ ரோலில் நடித்தார். ஆனால் படம் வெளியாகும் போது அவரது பகுதி நீக்கப்பட்டிருந்தது. அது தவிர, மார்ட்டின் சோல்வேக்கின் 'ஹலோ' என்கிற ஆல்பத்துக்கான இசை வீடியோவில் தோன்றியிருக்கிறார்.

**உதவும் உள்ளம்**

தன் பெயரில் ஒரு அறக்கட்டளை தொடங்கி, பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் போரில் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு உதவி செய்து வருகிறார். தவிர, செர்பிய மடங்கள் மற்றும் தேவாலயங்களுக்கும் நிதியுதவி செய்கிறார்.

# தனிமை மோசமானது

தனித்து வாழ்பவர்களின் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்து வருகிறது. அமெரிக்காவைச் சேர்ந்த விவேக் மூர்த்தி என்ற மருத்துவர் தனிமை பற்றி சமர்ப்பித்த தனது அறிக்கையில், "தனிமை என்பது மோசமான ஓர் உணர்வு. அது தனிப்பட்ட மற்றும் சமூக ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்கிறது. இதயநோய், டிமென்ஷியா, பக்கவாதம், மனச்சோர்வு, பதற்றம் ஆகியவற்றுடன் தொடர்புடையது.

ஒரு நாளைக்கு 15 சிகரெட்டுகள் புகைப்பதால் ஏற்படும் பாதிப்பை விட மோசமான பாதிப்பை தனிமை உருவாக்குகிறது. இது உலகளாவிய அச்சுறுத்தலாக உருமாறி வருகிறது" என்று தெரிவித்துள்ளார்.

இதுபற்றி பேசியுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் டைரக்டர் ஜெனரல் மருத்துவர் டெட்ராஸ் அதானோம், "உலகம் முழுவதும் தனிமை என்பது உடல்நலம் மற்றும் நல்வாழ்வுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்துகிறது. போதுமான சமூகத் தொடர்புகள் இல்லாதவர்கள் மனச் சோர்வு, தற்கொலை எண்ணம் போன்ற ஆபத்துகளில் உள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

"ஜப்பானில் 2018ஆம் ஆண்டு தனித்து வாழ்பவர்களின் நலனுக்காக தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டு அமைச்சர் பதவியும் உருவாக்கப்பட்டது. அந்த அளவுக்கு கண்காணிக்க வேண்டிய விடயமாக தனிமை உள்ளது.

மனிதன் ஒரு சமூக விலங்கு. பண்டைய காலம் முதல் மனிதன் கும்பலாக வாழ்ந்ததற்கான சான்றுகள் இருக்கின்றன. கடந்த 10 வருடங்களாக மனநலம் குறித்து அதிகம் பேசப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக தனிமை பற்றி அதிகம் பேசப்படுகிறது. கொரோனா பெருந்தொற்றின்போதே மக்கள் தனிமைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

தனிமை இரண்டு வகைப்படும். சூழ்நிலையினால் தனிமைப்படுத்தப்படுவது, மற்றொன்று மனநோயினால் ஒருவர் தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்வது. இது தவிர, தானாக விரும்பி தனிமைப்படுத்திக்கொள்வது ஒரு வகை.


முதல் வகையைப் பொறுத்தவரை அந்தச் சூழல் மாறினாலோ, சரியானாலோ சரியாகிவிடும். மனநோயினால் தனிமையில் இருப்பவர்களுக்கு அதற்கான சிகிச்சை எடுத்தால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். தானாக விரும்பி தனிமைப்படுத்திக் கொள்வதை பற்றிக் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

இளம் தலைமுறையினர் தனிமைக்குத் தள்ளப்படுவதற்கு சமூக வலைத்தளங்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ காரணமாகத் திகழ்கின்றன. தனிமை மோசமான ஓர் உணர்வு. இது தனிப்பட்ட மற்றும் சமூக ஆரோக்கியத்துக்கும் தீங்கு விளைவிக்கும். இதயநோய், மறதி, பக்கவாதம், மனச்சோர்வு, பதற்றம் போன்றவை ஏற்படுவதற்கும் வாய்ப்பாக அமைகிறது தனிமை.

விரும்பித் தேர்ந்தெடுக்கும் தனிமையை சிகிச்சை மூலம் சரி செய்ய இயலாது. தாங்களாகவே அதிலிருந்து வெளியே வருவதற்கு முயல வேண்டும். எடுத்துக்காட்டாக, சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், விருப்பமான கிளப் அல்லது குழுக்களில் சேர்தல், ஒத்த சிந்தனை உடையவர்களுடன் நேரம் செலவிடுதல் போன்றவற்றில் ஈடுபட வேண்டும். அப்போது தனிமை மெதுவாக விலகத் தொடங்கும்.

புதிய நபர்களைச் சந்திக்கும்போதும் புதிய விடயங்களைக் காணும் போதும் தனிமை என்ற குறுகிய வட்டத்திலிருந்து வெளியே வர முடியும். கூடுதலாக உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு மற்றும் நல்ல தூக்கம் போன்ற நடைமுறைகளைப் பின்பற்றுவதால் தனிமையினால் ஏற்படும் எதிர்மறையான விளைவுகளைத் தவிர்க்கலாம். இந்தப் பழக்கவழக்கங்கள் தற்கொலை, தன்னைத் தானே காயப்படுத்திக் கொள்வது போன்ற எண்ணங்கள் வராமல் தடுக்கும். சமூகத்துடன் தொடர்பில் இருக்க வேண்டும்.

தனிமையின் அலைகளால் தாக்கப்படும்போது யாரிடமாவது பேசுவது நல்லது. அது நண்பராக இருக்கலாம் அல்லது மனநல ஆலோசகராக இருக்கலாம். தனிமை ஒருவரை அழுத்தும் போது தகுந்த உதவியை நாடுவதில் தவறில்லை என்றார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்வில்லாத் தீவா?




தென்திசை காற்று
தென்றலாய் வீசலாம்
தீண்டலாய்
இனத் தூண்டலாய் வீசி
தர்மம் போற்றும்
மதக் காற்றை
அதர்மம் போற்றிடும்
ஆசாமிகள்
அழுக்காக்கி -எம்
இனத்தீர்வை
மாசுபடுத்துவதேனோ
தேரர்கள் வாயினில்
தீதின்றி தீயவையற்று
நீதிக்காற்று வீசுமெனில்
தீர்வில்வாத் தீர்வு
தென்றலாய் மலரும்

தமிழினியன் பரந்தாமன்
வவுனியா.

## மரத்தைக் காத்து மாநிலம் காப்போம்

மரத்தின் ஓலை மனித அல்வியோலை
இரண்டும் ஓர்ந்தால் செயலில் ஒன்றே
மரத்து ஓலைகள் புறத்து நிற்க
நுரையீரலுள்ளே தலைகீழ் மரத்துள்
அல்வியோலை கரந்து உறையும்
இரத்தசுத்தி ஆவதும் அங்கே
மரம்தரு காற்று அல்வியோலைக்கு
உரம்தரு அமிர்த ஒட்சிசனாகும்
மரமே மனிதற்கு உயிர்ப்புத் தருவதால்
மரத்தை வளர்த்து மாநிலம் காப்போம்

சி.இராஜேந்திரா.



## வாழ்வின் போக்குகள்

இலைகளில் வழியும்
நீர்த்துளி போல்
விட்டு விடாமலும்
பற்றிக்கொள்ளாமலும்
ஓர் அவஸ்தை..

மண்ணில் கலந்த நீர்
பாதங்களோடு
ஒட்டிக்கொள்ளும் சேறாய்
ஓர் அவஸ்தை..

மழை மேகங்கள் பொழியலாம்
மழை மேகம் கலையலாமென
மயக்கம் கொள்ளும்போது
திடீரென மாறும் வானிலையாய்
ஓர் அவஸ்தை..

வாழ்வின் போக்குகள்
ஒரு மழையைப் போல்
ஒரு வெய்யிலைப் போல்
கணம் கணம் மாறுமெனத்
தெரிந்த பின்
ஈரங்களின் அவஸ்தைகள்
அமிழ்ந்து போகின்றன..

ஒரு வானிலை மாற்றத்திற்கு
தயாராகும் மனநிலைபோதும்
வாழ்வை எதிர்கொள்ள..

சாங்கரி சிவகணேசன்

## மௌனத்தின் தேடல்-692



## கல்லறைகளும் கருவறும்

கண்கண்ட தெய்வங்களின்
கண்ணீரிலும் கூட உறங்கிய
கல்லறைகள் கருவுறும்
விண்கண்ட தெய்வங்கள்கூட
வீதியில் இறங்கிப் போராட
வீரர்கள் துயிலெழுவர் ஆம்!
வீரத்தாயே! வித்துக்கள்
வேரூன்றி விட்டன.இனி
விரைந்து வருவர் உம்மிடம்
எழுந்திடுவீர்! இது உறுதி

கே .எஸ்.சிவஞானராஜா,கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்- 693



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எமது முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## சாபக்கேடு

பத்து மாதங்கள் கருவறை தனில் பக்குவமாய் சுமந்து
பற்பல கனவுகளுடன் பூமிக்கு உதயமாக்கி
பாசம் எனும் ஆகாரம் தனை
நாளொரு பொழுது பொழுதொரு மேனியாய் ஊட்டி
பள்ளி செல்லும் பாலகப் பருவம் தனில்
நம் தமிழ் மண்ணின் விடிவுக்காய்
படைக்கலம் தனை தாங்கி போர்க்களம் நோக்கி நடைபோட்டு
மண்ணின் மைந்தர்களாகி விண்ணுலகம் வென்றிடுவானே!
இவளோ வீழ்ந்து அழுதிடுவாள் அவள் கல்லறை தனில்

ஆ.பாலமதுஜா
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

## தாய்மையின் வலி

பத்து மாதம் கருவறையில் சுமந்து
பக்குவமாய் பத்தியமும் காத்து
தாய்மை எனும் பிரசவ வலியை உணர்ந்து
மாந்தர்கள் போற்றிப் பெற்றெடுத்தேன்
மறத் தமிழனாய் வளர்த்து வீர வேங்கையாக்கி
மாற்றானிடமிருந்து தாயகத்தை மீட்க போராடி
தன்னுயிர் ஈர்த்த என் மகனே மாவீரனே !
தாயகம் உள்ளவரை கல்லறையில்
தீபம் ஏற்றி தலைசாய்த்து வணங்கிடுவோம்.
ஆ.செல்வி, திருநாவலூர்.

## புத்திரசோகம்

தாலாட்டி சீராட்டி
பாலூட்டி நிலாக்காட்டி சோறூட்டி
கண்ணில் கருமணி போல்
காத்து வளர்த்த பிள்ளை
காலத்தின் தேவைக்காய்
காலனவன் விளையாட்டால்
மண்ணோடு மண்ணாக
மாண்டு கிடக்கும் மைந்தன்தனை
அவன் சமாதி மேல் விழுந்து
நித்திரை போதும் எழுந்து வா
என் மகனே எனக் கத்திக்
கதறியழும் தாயவள் தன் சோகம்
அவள் உயிர் வாழும் வரை
என்றுமே மாறிடாத புத்திர சோகம்

சி.மகாலட்சுமி
கொக்குவில்.

## இன்றைய புரவலர்கள்

செய்தியைப் போட்டீர்கள்
ஏன் படத்தைப் போடவில்லையென
ஊடகங்களை இன்றைய
புரவலர்கள் கேட்கும் நிலையில்
அன்று ஓசைப்படாமல் அன்னை செய்த
அறப் பணிகள் எத்தனை எத்தனை

பி.மதுஷ்சன் ,தையிட்டி.

## எப்போ காண்போம்

கருவாய் குடியிருந்த
வயிறு பதைபதைக்க
கூடிக்குலவிய தளிர்கள்
கொடுமையால்
விதையாகி மண்ணில்
மீளாதுயிலும்
நினைவிடத்தில் மாலையிட்டு
சுடரேற்றி ஒளியூட்டி
கதறிப் புலம்புகிறோம்
உம் பூமுகம் காட்டீரோ!

சி.இ.அன்புதுரை
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா




காலத்தின் பதிவு 86

## விளங்கிய சம்பத்து

"பெண்ணைவிட்டு விலகிச் செல்" என்று சாத்திரங்கள் எச்சரிக்கின்றன. கருங்கல்லின் கடினத்தன்மையையும் விஷத்தின் கொல்லும் தன்மையையும் எடுத்து இணைத்துத்தான் பெண்ணை பிரம்மன் சிருஷ்டித்தான் என வடமொழியிலுள்ள சாடு சுலோகம் ஒன்றும் கூறுகிறது. விஷத்தின் கொல்லும் தன்மை பெண் சிருஷ்டியில் வந்து விட்டதால் தான் அதை உண்டும் பரமசிவன் பிழைத்தார். கருங்கல்லின் கடினத் தன்மை போய்விட்டதால் தான் சேது கட்டிய காலத்தில் பாறைகள் சமுத்தர ஜலத்தின்மீது மிதந்தன என்று வேடிக்கைக் கதைகளும் அந்தக் கூற்றுக்கு உவமையாகக் காட்டப்படுகின்றன.

விஷய சுகம் ஜன்ம விடுதலைக்கு விரோதி என்ற தத்துவமும் உறுதியாக ஏடுகளில் விளக்கப்படுகிறது. இத்தனையையும் இளைய பல்லவன் படித்துத்தான் இருந்தான். ஆனால் அந்தப் போதனைகளில் எதையும் நம்பத் தகுந்த நிலையில் அவன் அன்று இல்லை.

பக்கத்தில் அமர்ந்திருந்த பைங்கிளி எடுத்துக் காட்டிய ஆபத்தையும் அந்த ஆபத்தை விளைவிக்கவல்ல அக்ஷயமுனைப் பிராந்தியப் பழக்கத்தையும் அப்படியொரு பழக்கமிருந்தும் தன்னைத் தப்புவிப்பதிலேயே எண்ணங்களை ஓடவிட்ட அந்தப் பைங்கிளியின் தியாக புத்தியையும் நினைக்க நினைக்க பெண்ணைப் பற்றி எச்சரித்த சாத்திரங்களும் தத்துவங்களும் அவனுக்கு வேப்பங்காயாக மாறின.

பெண்களின் மகத்தான தியாகத்தை வேடிக்கைக்கு இகழ்வது கூடப் பெரும் பாவம் என்று அந்த நேரத்தில் இளையபல்லவன் திடமாக நினைத்தான். அவள் விவரணத்தில், விவரணம் தந்த வார்த்தைகளில், வார்த்தைகளை உதிர்த்த குரலில், அத்தனை கருணையும் தியாகமும் மண்டிக்கிடந்தன.

"இந்த நாட்டின் பழக்கம் பயங்கரம்" என்று அவள் குறிப்பிட்ட போது அப்படியென்ன பெரும் பயங்கரம் அதில் இருக்க முடியும்?" என்று நினைத்த இளையபல்லவனுக்கு அவள் அதை விளக்க விளக்கத்தான் விஷயத்தின் எல்லை, தன்னை விழுங்கப் பலவர்மன் விதைத்த விபரீதத்தின் ஆழம், என்ன என்பது புரியலாயிற்று. தந்தை தன்னை மறைந்திருந்து கவனித்து, கொள்ளையரிடமும் சுட்டிக்காட்டிப் போய் விட்டதை அல்பமாக எண்ணிய இளையபல்லவனுக்குத் தந்தையின் இயற்கைக்கு மாறான நடத்தையை எடுத்துக் காட்டிய மஞ்சளழகி, "இந்த நாட்டில் அப்படியொரு பழக்கம் இல்லாவிட்டால் என் தந்தை ஒன்று உங்களைச் சிறை செய்வார். அல்லது என்னிடம் அவர் அனுமதியின்றித் திருமணமின்றி உறவு கொண்டாடியதற்காகக் கொன்றாவது விடுவார். இது தானே இயற்கை இளைய பல்லவரே" என்று கேட்டாள்.

இளையபல்லவன் சற்று யோசித்துவிட்டு, "ஆம் மஞ்சளழகி! அது தான் இயற்கை!" என்று பதில் சொன்னான்.

"ஆனால் இயற்கைக்கு மாறாக ஏன் நடக்கிறார் என் தந்தை தெரியுமா?" என்று வினவினாள் மஞ்சளழகி.

"தெரியவில்லை மஞ்சளழகி," என்றான் இளையபல்லவன்.

"அப்படி நடப்பதில் அவருக்கு லாபமிருக்கிறது," என்று மஞ்சளழகி சுட்டிக்காட்டினாள்.

"என்ன லாபம்?"

"உங்களை இங்கேயே இருத்திக் கொள்வது பெரும் லாபம் அவருக்கு. நீங்கள் போய்விட்டால் பெரும் நஷ்டம். இந்த நிலையும் உங்களால் விளைந்ததுதான்."

"என்னாலா! நான் என்ன செய்தேன்!" மஞ்சளழகி அத்தனை சோகத்திலும் இந்தப் பதிலைக் கேட்டதும் கலகல வென நகைத்தாள்.

இடையை முன்னை விடப் பலமாக இழுத்தணைத்து அவள் முகவாய்க் கட்டையை வலது கையால் பிடித்துத் திருப்பிய இளையபல்லவன், " எதற்குச் சிரிக்கிறாய் மஞ்சளழகி!" என்று கேட்டான் சற்றுக் கடுமையுடன். அந்த கடுமை, குரலில் தெரிந்த அதட்டல் இரண்டையும் மஞ்சளழகி பெரிதும் விரும்பினாள்.

(தொடரும்...)

---

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 32

## பாரதியின் பின்புலங்கள்

இந்தக் கருத்தினை இலக்கிய வரலாறு கண்ட பலரும் ஒப்புவர்.


"பொது மக்களுக்கு உகப்பான பல்வேறு கவிஞர்களையும் இவர் பின்பற்றியுள்ளார்" என்கிறார் எஸ்.வையாபுரிப்பிள்ளை.

**"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது**
**சொற்புதிது சோதிமிக்க**
**நவகவிதை எந்நாளும்**
**அழியாத மகா கவிதை"**

என்று பாரதி தன் கவிதைக்கு அறிமுகப் படம் எழுதுவது வெறும் ஆரவார உரையன்று. பாரதியின் கைகளில்தான் தமிழிலக்கியத்தின் புதிய கவிதைக் கொள்ளை உருவாகிறது. பழைய இலக்கியங்களில் பாரதிக்குப் பயிற்சி இருந்தது. புதிய நிகழ்காலச் சமுதாயத்தைப் பற்றிய கவலை இருந்தது. பாரதியின் கவிதை வெற்றி இதுதான்.

**"பாடு முறையைப் புதிப்பித்தான்**
**பாடு பொருளில் புதுமை செய்தான்."**

இதனைக் கலாநிதி கைலாசபதி இப்படி விளக்குவார்.



**"தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம், திருப்புகழ், கந்தரலங்காரம், திருவருட்பா முதலிய பாடல்கள் பெரும்பாலான தமிழ் மக்களால் பொருள் அறிந்தும் பொருள் அறியாமலும் சடங்கு முறையிற் பாடப் பெறுவன. பாரதி அவற்றை முன் மாதிரியாகக் கொண்டு காலத் திற்கேற்ற வகையில் பொருள் மாற்றஞ்செய்து உருவ ஒருமைப் பாடு கண்டான். தேச பக்தியைத் தெய்வ பக்தியாக உருமாற்றஞ் செய்த புலவன், பழைய இசைத் தமிழ் வடிவங்களைப் புதிய பொருளைப் பாடப் பயன்படுத்தினான். ஓர் உதாரணம் போதுமானது. மணிவாசகர் திருப்பெருந்துறையில் விடியற்காலத்தே இறைவனைத் துயில் எழுப்புவதாகத் திருப்பள்ளியெழுச்சி என்னும் பனுவலைப் பாடினார். பாரதியோ பாரதமாதா திருப் பள்ளியெழுச்சி பாடினான்.**

(ஒப்பியல் இலக்கியம்: பக் 243-43)

பழைய சமயப் பாடல்களை வெறும் சொற்கோவைகளாக அன்றி, மறை பொருளும் தொனிக்கும் ஆன்ம வெளிப்பாடாக உணர்ந்தவன் பாரதி.

இசைத்தமிழ் மரபு தமிழின் இலக்கியப் பிரிவோடு பண்டிருந்தே தொடர்புடையது.

**"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்"**
**"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்"**

என்பன போன்ற பக்தி இலக்கியத் தொடர்கள், இலக்கியத்தில் இசையின் பங்கை எடுத்துச் சொல்லுவன.

இலக்கியத்தில் இசையின் அதிக மான ஊடுருவல், பதினெட்டாம் நூற்றாண்டில் சிந்து, கண்ணி முதலான புதிய வடிவங்களைப் பிறப்பித்தது. இந்த இசைப்பாக்களே "சாகித்தியங்கள்" என்று வழங்கப் பெற்றன.

சமயச் சார்புள்ளனவாகத் தோன்றிய இவ்விசைப் பாக்களைச் சமயச் சார்பு குறைவாகவும் அரசியற் சமூகச் சார்பு மிகுதியாகவும் அமையப் பாடிச் சோதனை செய்தவன் பாரதி.

அந்தச் சோதனையின் வெற்றி தான் திட்டவட்டமான ஓர் இலக்கியக் கொள்கையைத் தீர்மானித்தது.

பாரதியின் பாட்டு வெற்றிக்குக் காரணம் அவன் கவிதையைச் சமூகப்படுத்தியதுதான். முப்பது கோடி உள்ளங்களின் ஊமை எண்ணங்களை அவன் ஒரு நாவால் பாடினான்.

அந்தப் பாட்டின் எதிரொலியில் ஊமை உள்ளங்களும் பேசத் தொடங்கின. அவன் மக்களுக்காகப் பாட வேண்டியதன் உணர்வு, காலத்தின் கட்டாயத்தால் பிறந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'


# சுகமான விடியல்

375

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## அதிகரித்த நிறையுடன் பலர் நீண்டகாலம் வாழ்கிறார்களே?

**எனது நிறை அதிகம் என்று வைத்தியர்கள் சொல்கிறார்கள். உணவைக் குறைத்து சாப்பிடாமல் இருந்தால் தலை சுற்றுகிறது. உணவைக் கடுமையாகக் குறைத்தால் உடல் பலவீனப்பட்டு விடும் என்று பயமாக இருக்கிறது. உடல்களைப்பை போக்குவதற்கு எந்த வகையான சத்துமா வகைகளைச் சாப்பிடலாம். உப்புச் சோடா குடித்தால் நிறை அதிகரிக்குமா? அதிகரித்த நிறையுடன் பலர் நீண்ட காலம் வாழ்கிறார்களே? உடல் மெலிந்து விட்டால் நோய்க் கிருமிகள் தாக்கும் ஆபத்து ஏற்படாதா?**



உங்கள் களைப்புக்கு முக்கிய காரணியாக இருப்பது உங்களது அதிகரித்த உடல் நிறையே. உங்கள் அதிகரித்த உடல் நிறையைச் சமாளிக்கும் வல்லமை உங்கள் உடல் உறுப்புகளுக்குப் போதாமல் இருக்கும் பொழுது களைப்பு ஏற்படுகிறது. உங்கள் களைப்புக்கு வேறு ஏதாவது காரணிகளும் இருக்கிறதா என்று உங்கள் வைத்தியர் உங்களைச் சோதித்து பார்த்திருப்பார். உணவைக் கடுமையாகக் குறைத்து பட்டினி கிடந்துதான் உடல் நிறையைக் குறைக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

அவ்வாறு செய்தால் உங்களுக்கு மட்டுமல்ல யாருக்கும் தலைச் சுற்றும் களைப்பும் ஏற்படுவதுடன் உடலும் பலவீனமாகும். உடல் நிறையைக் குறைப்பதற்குச் சாப்பாட்டு வகையிலேயே மாற்றம் செய்ய வேண்டும் என்பதே முக்கியமானதாகும். நீங்கள் நிறையைக் குறைப்பதற்கு மாப்பொருள் அதிகமுள்ள உணவுகளைத் தவிர்த்து நல்ல ஊட்டச்சத்துள்ள, புரதம் நிறைந்த, கனியுப்புகள் நிறைந்த, விட்டமின்கள் நிறைந்த உணவுகளைப் போதியளவில் உண்ண முடியும். நீங்கள் போதியளவில் உண்ணக்கூடிய உணவுகளாவன பால், மரக்கறி வகைகள், கௌபி, முட்டை, மீன், இறால், பயறு, பருப்பு வகைகள், பழவகைகள், கோழி இறைச்சி,சுறா, சோயா, அவரை, இலை வகைகள், கொண்டல் கடலை போன்றவையாகும்.

இவற்றைப் போதியளவில் உண்டு நிறை குறைந்து வரும் போது உங்கள் உடல் பலவீனப்பட மாட்டாது. நோய்க் கிருமிகள் தாக்கும் ஆபத்தும் ஏற்படாது. மேலதிக சத்துமாக்களும் தேவைப்படாது. சோடா வகைகள் உடலுக்குப் பாதுகாப்பானது அல்ல. அவற்றைத் தவிர்ப்பது நல்லது. அதிகரித்த நிறையுள்ளவர்கள் அது எந்தக் காரணத்திற்காகவும் ஏற்பட்டிருந்தாலும் பரம்பரை காரணமாக ஏற்பட்டிருந்தாலும் கூட நிறையைக் குறைத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். நிறையைக் குறைத்துக் கொள்வதன் மூலம் வாழ்நாளை அதிகரித்துக் கொள்ளலாம் என்று ஆராய்ச்சிகள் சொல்கின்றன. நிறையைக் குறைப்பது கடினமல்ல முயற்சி எடுங்கள்.

**Dr.சி.சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்.**

## அன்பு என்னும் பே(போ)ராயுதம்

அன்பு உடல், உள, சமூக ஆரோக்கியத்தின் அடிநாதமாய், திறவுகோலாய் எங்கும் வியாபித்து நிற்கின்றது. மனம் அன்பு மயமாகி நிற்கும் பொழுது ஏற்படும் அளவு கடந்த ஆறுதலும் அமைதியும் மனிதனுக்கு பேராற்றலையும் துல்லியமாகச் செயற்படும் திறனையும் நோய்களை எதிர்க்கும் வல்லமையும் வழங்கி நிற்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன. இறைவன் அன்பு மயமானவன் என்று சொல்லுவார்கள். அதனாலேயே அவன் சர்வ வல்லமையும் பொருந்தியவனாக விளங்குகின்றான்.

மனச்சஞ்சலங்களே பல நோய்களுக்கு வித்திடுகின்றன. இந்த மனச் சஞ்சலங்களை அகற்றும் அருமருந்தாய் அன்பு மிளிர்கிறது. எம்மீதும் எமது குடும்பத்தின் மீதும் அன்பு கொள்வோம். எமது சுற்றம், உறவுகள், நண்பர்கள் அனைவரும் மீதும் அன்பு கொள்வோம். ஊர், தேசம், மொழி, கலை, கலாசாரம் அனைத்தின் மீதும் அன்பு கொள்வோம். உலகிவரும் உயிர்களிலும் இயற்கையிலும் அன்பு கொள்வோம். இந்த அன்பினால் ஏற்படும் மன அமைதி உடலின் நோய் எதிர்ப்பு படைபலத்தைப் பெருக்கும் பேராயுதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

எம்மை வெறுப்பவர்களிடமும் அன்பு வைக்கும் மனவலிமையை வளர்த்துக் கொள்வது இலகுவான காரியமல்ல. அதேசமயம் அது முடியாத விடயமுமல்ல. எம்மைப் பிறர் வெறுப்பதற்குக் காரணம் என்ன? நாம் பிறரை வெறுப்பதற்குக் காரணம் என்ன? எமது எதிரியாக நாம் கருதிக் கொள்பவர்களிடம் புதைந்து கிடக்கும் அன்பு ஊற்றை அடையாளப்படுத்திக்கொள்ள என்ன செய்யலாம்? வெறுப்புத்தான் அன்பினதும் ஆரோக்கியத்தினதும் எதிரி என்று தெரிந்து அதனை ஏன் வளர்த்துக் கொள்ள முயலுகிறோம்? தெரிந்தும் ஏன் பிழையான திசையில் செல்ல முனைகிறோம்.

மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் அன்பு மயமானவர்கள் தான். அன்பு இல்லாத மனிதர்கள் யாரும் இருக்க முடியாது. எம்மைப் பலர் வெறுப்பதற்கும் நாம் பலரை வெறுப்பதற்கும் அடிப்படையாய், காரணமாய் இருப்பது என்ன என்பதை நாமே அறிந்து கொள்வது இலகுவான காரியமல்ல. ஆனால் இந்த வெறுப்புணர்வுதான் அன்பினதும் ஆரோக்கியத்தினதும் முதல் எதிரி என்பதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டி இருக்கிறது. எதிரியிலும் அன்பு கொண்டு மன்னித்து எமது பாதையைத் தற்காத்து தடம் மாறாது பயணிக்கும் மனத்திடத்தை வளர்த்துக் கொள்வது உடல், உள, சமூக நன்னிலையான, உண்மையான ஆரோக்கியத்துக்கு வழி சமைக்கும்.

கோபமும் வெறுப்பும் பகை உணர்வும் ஒருவனின் ஆற்றலையும் ஆளுமையையும் வளர்ச்சியையும் மகிழ்ச்சியையும் பாதித்து நிற்கும் ஒரு பொது எதிரியாக வர்ணிக்கப்படுகின்றது. இந்தப் பொது எதிரியானவன் எமது பொன்னான நேரத்தின் பெரும் பகுதியையும் விழுங்கி ஏப்பம் விட்டுவிடுகின்றான். இந்த எதிரியை அன்பு என்ற அஸ்திரம் கொண்டு தாக்கி அழிப்பது ஒரு இலகுவான போர் அல்ல. பல தடவைகள் நாம் அந்த போரில் தோற்றுவிடுகிறோம். ஆனாலும் இந்தத் தோல்விகள் நிரந்தரமானவையல்ல என்பதை மனதில் நிறுத்தி அன்பு என்ற அம்பைக் கொண்டு அந்தப் பொது எதிரி மீது இலக்கு வைப்போம். அன்பு என்னும் பேராயுதத்தை சரியான முறையில் கையாளக் கற்றுக் கொண்டால் நாம் பல தொற்றுநோய்களையும் வாழ்வின் தடைகளையும் வெற்றி கொண்டு சுகமான விடியலை நோக்கிப் பயணிக்க முடியும்.

**Dr.சி.சிவன்சுதன்,**
**பொது வைத்திய நிபுணர்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசாவில் மீண்டும் மரண ஓலம்!
## 178 பேர் பலி, சுமார் 500 பேர் காயம்!



**(காசா)**

**போர் நிறுத்தம் முடிவடைந்து காசா மீதான தாக்குதலை நேற்று முன்தினம் ஆரம்பித்த இஸ்ரேல் படையினர் நடத்திய குண்டு மழையில் பெண்கள், குழந்தைகள் என 178 பேர் கொல்லப்பட்டதுடன் 500 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.**

நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் 178 பேரின் உடல்கள் கிடைத்துள்ளதாகவும் மேலும் 589 பேர் காயமடைந்துள்ளதாகவும் காசா மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கில் உள்ள பெய்ட் லாஹியா நகரில் உள்ள கமல் அத்வான் மருத்துவமனை நேற்று அதிகாலையில் இருந்து இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட 54இற்கும் மேற்பட்டோரின் உடல்கள் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டதாக தெரிவித்துள்ளது.

காசா நகரின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்ட முப்பது பேரின் உடல்களில் பெரும்பாலும் குழந்தைகள் மற்றும் பெண்கள். காசாவில் உள்ள பாப்டிஸ்ட் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

தெற்கில் உள்ள மருத்துவமனைகளில் டசின் கணக்கில் உயிரிழப்புகள் இடம்பெற்றதாக தெரிவித்துள்ளன.

இஸ்ரேலிய படையினர் நிலம், கடல் மற்றும் வான் வழியாக, காசா பகுதியின் வடக்கு, மையம் மற்றும் தெற்கில் வெவ்வேறு பகுதிகளில் குண்டுவீசித் தாக்கியுள்ளனர்.

இதன் விளைவாக குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட பலர் கொல்லப்பட்டதுடன் பெருமளவானோர் காயமடைந்துள்ளனர். (நி-5)

## ஈராக்கில்
# துப்பாக்கிச் சூடு 11 பேர் பலி


(பக்தாத்)

ஈராக்கின் டியாலா மாகாணத்தில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். டியாலா மாகாணத்தில் சாலையோரம் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு கடந்த வியாழக் கிழமை வெடிக்கச் செய்யப்பட்டது.

அதில் காயமடைந்தவர்களை மீட்பதற்காக அந்தப் பகுதியில் ஏராளமானவர்கள் குவிந்தனர்.

அப்போது அவர்களை நோக்கி பயங்கரவாதிகள் சரமாரியாக துப்பாக்கியால் நடத்தியதில் 11 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.

தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் சம்பவ இடத்திலிருந்து தப்பியோடிவிட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5)



# இதுவரை ரஷ்யாவால் அழிக்கப்பட்ட 125,000 உக்ரைனிய துருப்புக்கள்
## ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர்



(மொஸ்கோ)

உக்ரைனிய படைகள் எதிர்த்தாக்குதல் மேற்கொள்ள ஆரம்பித்ததில் இருந்து உக்ரைன் 125, 000 துருப்புகளை இழந்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு அறிவித்துள்ளார்.

ரஷ்ய - உக்ரைன் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளை எட்டிவிட்டுள்ள நிலையில் ரஷ்யாவின் தாக்குதல்களின் உக்ரைனின் பல துருப்புக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு கூறுகையில், உக்ரைன் தனது எதிர்த்தாக்குதலை ஜூன் மாதம் தொடங்கியதில் இருந்து 125,000 துருப்புகளை இழந்துள்ளதாக கூறியுள்ளார்.

மேலும், 16,000 யூனிட் அளவுடைய பல்வேறு ஆயுதங்களை உக்ரைன் இழந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், "மேற்கத்திய ஆயுதங்களை வழங்குதல் மற்றும் உக்ரைனிய கட்டளையின் மூலோபாய இருப்புகளை போரில் அறிமுகப்படுத்துதல் ஆகியவை போர்க்களத்தில் நிலைமையை மாற்றவில்லை.

எங்கள் இராணுவ வீரர்கள் திறமையாகவும் தீர்க்கமாகவும் செயற்படுகிறார்கள். மேலும் சாதகமான நிலைகளை ஆக்கிரமித்து, அனைத்து திசைகளிலும் தங்கள் கட்டுப்பாட்டு மண்டலங்களை விரிவுபடுத்துவார்கள்" என்று தெரிவித்தார்.

அத்துடன், ரஷ்யாவின் ஆயுதப் படைகள் உக்ரைனில் முன் வரிசையில் முன்னேறிவிட்டதாகவும் தீவிரமான பாதுகாப்பை மேற்கொள்வோம் மற்றும் ஆயுதப்படைகளின் போர்த் திறனை அதிகரிப்போம் என்றும் செர்ஜி ஷோய்கு எச்சரித்துள்ளார். (நி-5)

# இஸ்ரேலிய தூதரகத்திற்கு முன் தீக்குளித்த பாலஸ்தீனிய ஆதரவாளர்

(வோஷிங்டன்)

அட்லாண்டாவில் உள்ள இஸ்ரேல் தூதரகம் முன் நடந்த போராட்டத்தில் பாலஸ்தீன ஆதரவாளர் ஒருவர் தீக்குளித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

போராட்டம் தீவிரமடைந்து பாலஸ்தீன ஆதரவாளர் தன் மீது பெற்றோல் ஊற்றி நெருப்பு வைத்துக்கொண்டார். காப்பாற்ற முயன்ற பொலிஸாருக்கும் கை,கால்களில் தீக்காயங்கள் ஏற்பட்டிருப்பதாகக் அவர்கள் தெரிவித்துள்ளனர்.


அதிகாரிகளால் காப்பாற்றப்பட்ட அந்த நபர் மருத்துவமனையில் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சைப்பெற்று வருகிறார்.

தற்போது நடந்துவரும் யூத மற்றும் இஸ்லாமிய சமூகத்திற்கு இடையேயான பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது எந்த வகையிலும் தீவிரவாதத்தோடு தொடர்புடைய சம்பவமில்லை எனவும் தூதரக ஊழியர் யாருக்கும் எந்த வகையிலும் அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் ஏற்பாட்டில் 2022 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கோண்டாவில் ராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்றது.

## பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேசசபையின் வரணிப் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வு மற்றும் பரிசளிப்பு நிகழ்வு ஆகியன இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு வரணி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

சாவகச்சேரிப் பிரதேசசபைச் செயலாளர் க.சந்திரகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (நி-5-30)

• • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவர் சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் வாசிப்பு மாத பொது அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில், சனசமூக நிலைய தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-5)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர்பட்டப் படிப்புகள் பீடம்

**புதிய அனுமதிகள்**

1.கல்வியியல் முதுமாணி (MED) – 2023/24 (அணி XV) யாழ்ப்பாண நிலையம்

2.பண்பாட்டியலில் முதுமாணி (MCST) – 2023/24 (அணி V)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி: 22.12.2023

மேலதிக தொடர்புகளுக்கு : 021222 3608

**பதிவாளர்.** (சி-7782)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 1000 | 1200 | 800 | 1100 |
| தக்காளி | 600 | 550 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 150 | 150 |
| கோவா | 400 | 350 | 350 | 500 |
| கரட் | 350 | 480 | 350 | 500 |
| பூசணி | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 280 | 250 | 200 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 260 | 300 |
| பாகற்காய் | 800 | 500 | 500 | 300 |
| வெண்டக்காய் | 250 | 300 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 200 |
| பயற்றங்காய் | 800 | 600 | 500 | 600 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 400 |
| பீற்றூட் | 280 | 300 | - | 600 |
| கறிமிளகாய் | 600 | 900 | 750 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 1700 | 600 | 2000 |
| போஞ்சி | 650 | 600 | 650 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 650 | 360 |
| கீரை – 1 பிடி | 140 | 150 | 200 | 200 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1000 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 450 | 600 |
| வெங்காயப்பூ | -- | -- | - | -- |
| முள்ளங்கி | 160 | 200 | - | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 200 | 50 | 50 |
| ஈரப்பலா | 200 | 150 | - | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2980

**பதுமிதன்**

ஜெஸ்ட் வன் மன்த்
இந்த வருடத்தில எதுவும் பெருசா பண்ணலன்னு பீல் பண்ணாத..
நீ இவ்வளவு நாள் ஓட்டனதே பெரிய சாதனை தான்...



**மிதுளா**

வென்னவர் ஐ பீல் டவுன்:-
ஒன்றும் இல்ல சரியா போயிரும் விடு பாத்துக்கலாம்...
இந்த வார்த்தைகள வைச்சே அண்ணே வாழ்க்கையை ஓட்டிருவேன்ல....




**வதிரா**

பணமும் பதவியும் வந்தபின் மனிதனுக்கு வரும் முதல் வியாதி பார்வைக்குறைபாடு
"தனக்கு உதவியவர்கள் யாரும் கண்ணுக்குத் தெரிய மாட்டார்கள்...



**ஜனோஜ்**

சேர்-நேத்து படிச்சிட்டு வரச் சொன்ன நியூட்டனின் விதிகளை பற்றி சொல்லு..
நான்- முழுமையா ஞாபகம் இல்ல சேர், கடைசி இரண்டு வரிகள் ஞாபகம் இருக்கு...
சேர்- சரி தெரிஞ்சத சொல்லு
நான்- ஆகவே இவைகளை நியூட்டன் விதிகள் என கூறுவோம்.



**மிதுசன்**

இன் வின்ரர் சீசன்
நைட்டு நல்லா தூங்கிக் கொண்டிருக்கும்போது திடீர்ன்னு குளுர ஆரம்பிச்சிடும். எழுந்து பான் ஓப் பண்ண கூட முடியாது..கொசு வேற கடிக்கும்.. காதுல பாட்டு வேற பாடும்.
அந்த வேதனை இருக்கே அந்த வேதனை...



**நித்தீஸ்**

தண்ணீரை பாத்தவுடன் குளிச்சா அது மத்த மாசம்...



தண்ணீரை அரைமணி நேரமா பாத்து யோசிச்சு குளிச்சா அது டிசெம்பர் மாசம்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முன்னேற்ற பாதையில் செல்வதே நம்மவர்களையும் முன்னேறச் செய்ய சிறந்த வழி.
- ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# 1,206 மரண தண்டனை கைதிகள் சிறைச்சாலைகளில் உள்ளனர்

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் 1,206 மரண தண்டனை கைதிகள் உள்ளார்கள் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது, மரண தண்டனை, ஆயுள் தண்டனை கைதிகள் தொடர்பில் அமைச்சர் சுட்டிக்காட்டியதாவது,

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் 1,206 மரண தண்டனை கைதிகள் உள்ளார்கள். இவர்களில் 744 பேருக்கான மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 454 பேர் மேன்முறையீடு செய்துள்ளார்கள். 7 வெளிநாட்டு பிரஜைகள் மரண தண்டனை கைதிகளாக உள்ளனர்.

சிறைச்சாலைகளில் 346 ஆயுள் தண்டனை கைதிகள் உள்ளனர். இவர்களில் 100 பேர் மேன்முறையீடு செய்துள்ளார்கள்.

அத்துடன் சிறைச்சாலைகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 10,784 கைதிகளில் 61.3 சதவீதமானோர் போதைப்பொருள் குற்றச் சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் என தெரிவித்தார். (ம-7)

# செட்டிக்குளம் இரட்டைக்கொலை 19 வயதான இளைஞர் கைது

வவுனியா - செட்டிக்குளம் இரட்டைக் கொலை தொடர்பில் 19 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி - பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உருத்திரபுரம் பகுதியில் நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 30 ஆம் திகதி செட்டிக்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வர்த்தக நிலையமொன்றில் கணவன், மனைவி இருவரும் தாக்கிக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இதன்போது, 10,000 ரூபா பணமும் தங்க நகையும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, அவர் குற்றச்செயலின் போது அணிந்திருந்த ஆடைகளும் திருடப்பட்ட தங்க நகையும் பை ஒன்றில் மறைத்துவைத்து கிணற்றில் வீசப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

செட்டிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# உயர்தரப் பாடத் தெரிவுக்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த (சா) தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகுவதில் ஏற்பட்ட காலதாமதம் மாணவர்களுக்கு மிகுந்த அசௌகரியங்களைக் கொடுத்திருக்கும் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களினால், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் காலதாமதமாகின.

இந்நிலைமை சமகால மாணவர்களுக்கு மிகுந்த பாதிப்பே.

ஆயினும் காலம் கடந்த நிலைமையை ஏதோவொரு வகையில் சீராக்கம் செய்து உரிய காலத்தில் உயர்தரப் பரீட்சையை எழுதுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

எதுவாயினும் தமிழ் மாணவர்களின் பெறுபேறுகள் திருப்திப்படுகின்ற அளவில் இருப்பது மகிழ்வுக்குரியது.

அதேநேரம் க.பொ.த (சா) தரப் பரீட்சை எழுதிய கையோடு தனியார் கல்வி நிறுவனங்கள் வகுப்புக்களை ஆரம்பிக்க, மாணவர்கள் தத்தம் விருப்பத்துக்கேற்ப உயர்தரப் பாடத்துறைகளைத் தெரிவு செய்கின்றனர்.

பொதுவில் பெரும்பாலான மாணவர்கள் உயர்தரத்தில் விஞ்ஞானம் மற்றும் கணிதத் துறைகளைத் தேர்ந்தெடுத்து அதில் கற்றல் செயற்பாட்டை ஆரம்பித்துவிடுவர்.

பின்னர் பரீட்சைப் பெறுபேறுகளின் முடிவுகள் அவர்களின் பாடத் துறையை மாற்றியமைப்பதாகக்கூட அமையலாம்.

பொதுவில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் பாடத் தெரிவு என்பது மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றது.

அதாவது சக நண்பர்கள் கணிதத் துறையைத் தேர்ந்தெடுத்தனர் என்பதற்காகத் தானும் அதே துறையைத் தேர்ந்தெடுக்கின்ற வழமை நடைமுறையில் இருப்பதனால், ஆயிரக்கணக்கான மாணவர்கள் உயர்தரத்தில் கோட்டைவிடுகின்றனர்.

எனவே மாணவர்களின் இயலுமை, அவர்களிடம் இயல்பாக இருக்கக்கூடிய துறைசார் ஆற்றல், அக, புறச்சூழ்நிலைகள், பல்கலைக்கழக அனுமதிக்கான சந்தர்ப்பங்கள் ஆய விடயங்களைக் கவனத்தில் கொண்டு மாணவர்கள் பாடத்துறையைத் தெரிவு செய்வதற்கு கல்விச் சமூகம் வழிகாட்ட வேண்டும்.

ஆம், வர்த்தக துறையில் திறமையுள்ள மாணவனை விஞ்ஞானம் கற்க அனுமதிப்பதும் கலைத்துறையில் மிகுந்த ஆர்வமுடைய மாணவனை விஞ்ஞானத்துறையில் சேர்ப்பதும் மிகக் கொடுமையான செயல்.

எனவே எந்தெந்த மாணவர்களுக்கு எந்தெந்தத்துறைகள் பொருத்தமோ அதற்கேற்றவாறு உரிய பாடத்துறைகளைத் தேர்ந்தெடுப்பதானது குறித்த மாணவர்கள் இலக்கை அடைவதற்குப் பேருதவியாக அமையும்.

அதுதவிர எதிர்காலத்தில் குறித்த பாடத் துறையில் நிபுணத்துவமுடையவர்கள் உருவாகுவதற்கு இது வழிவகுக்கும் என்பதால், மாணவர்களின் பாடத் தெரிவில் மிகுந்த கரிசனை செலுத்தப்பட வேண்டும்.

# ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ்சார்ஜனின் மகன் கைது

## திருமலையில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் நேற்று சனிக்கிழமை இளைஞரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் திருகோணமலை பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக குறித்த இளைஞரை பைசல்நகர் பிரதான வீதியில் வைத்து சோதனையிட்ட போது,

அவரிடமிருந்து 5 கிராம் 400 மில்லிகிராம் ஐஸ் போதைபொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட நபர் கிண்ணியா - மாஞ்சோலை வீதியில் வசித்து வருபவர் எனவும், ஹதரஸ்கொடுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் சார்ஜன்ட்டின் 24 வயதுடைய மகன் எனவும் தெரியவருகிறது.

இவர், ஏற்கனவே ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை கைது செய்யும்போது குறித்த இடத்தில் இருந்து தப்பி ஓடியவர் என்பதும் பொலிஸ் ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, கைதான நபரை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ள நிலையில், விசாரணைகளின் பின்னர், திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# மேல் மாகாணத்தில் 24 மணிநேரமும் தபால் நிலையங்கள் திறப்பு

மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 13 தபால் நிலையங்கள் 24 மணிநேரமும் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பொரளை, வெள்ளவத்தை, ஹெவ்லொக் டவுன், தெஹிவளை, மொரட்டுவ, பாணந்துறை, களுத்துறை, கொட்டாஞ்சேனை, கொம்பனித்தெரு, பத்தரமுல்ல, கல்கிஸ்ஸ, நுகேகொட மற்றும் சீதாவகபுர தபால் நிலையங்கள் 24 மணிநேரமும் திறந்திருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

அந்த தபால் நிலையங்கள் ஊடாக போக்குவரத்து பொலிஸாரால் அறவிடப்படும் தண்டப் பணத்தை செலுத்த முடியும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை எனும் இடத்தில் மின்சாரம் தடைப்படும்.

JSAC

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"பெண்களுக்கெதிரான அனைத்து வன்முறைகளையும் தடுப்பதற்கு இன்றே உறுதி பூணுவோம்!. தனிமனித மாற்றமே சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கும்!!"

16 2023

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டின் மேல் விழுந்த தென்னை



(தருமபுரம்)
கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் கட்டைக்காட்டு பகுதியில் கடும் மழை காரணமாக தென்னை மரம் வீட்டின் மீது விழுந்துள்ளது.

இதனால் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. நேற்று அதிகாலை 4 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. (நி-5-316)

## துப்பாக்கி ரவைகள் மீட்பு



(தருமபுரம்)
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உமையாள்புர பகுதியில் கைவிடப்பட்ட பற்றைப் பகுதியில் ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் அவை மீட்கப்பட்டதுடன் கிளிநொச்சி நீதிமன்ற அனுமதியுடன் சிறப்பு அதிரடிப் படையினரால் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-316)

## ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது

(தருமபுரம்)
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விநாயகபுரம் பகுதியில் நேற்று முன்தினம் ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக கிளிநொச்சி விநாயகர்புரம் பகுதியில் பெண்ணொருவரை சோதனையிட்ட பொழுது உடமையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 10 கிராம் 110 மில்லிகிராம் ஹெரோயினுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அன்றைய தினமே கிளி நொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய பின் 14 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட் டுள்ளார் என கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-316)



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில், பெண்கள் வன்முறைக்கெதிரான வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் பெரியபரந்தன் கிராம அலுவலர் அலுவலகத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (படம்-தேவானந்தன்)

# ஊடக அடக்குமுறைகளிற்கெதிராக கிளர்ந்தெழுந்த ஊடகவியலாளர்கள்

(வவுனியா)
படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களிற்கு நீதிவேண்டியும் ஊடக அடக்குமுறைகளிற்கு எதிராகவும் வவுனியாவில் நேற்று போராட்டப்பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.




வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழையபேருந்து நிலையத்திற்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டபேரணி முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கருத்து தெரிவித்த ஊடகவியலாளர்கள் இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற தரப்புக்கள் தமிழ் ஊடகங்களை அடக்கியாள நினைப்பது வழமையான தொடர்கதையாகவே இருந்துவருகின்றது.

குறிப்பாக 2009ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்கு வரும் வரையில் அதிகாரத் தரப்பின் வன்முறைகளால் 39 ஊடகவியலாளர்களின் இன்னுயிர்களை நாம் இழந்துள்ளோம். அதற்கான நீதிமறுக்கப்பட்டநிலையில் இன்றும் நீதிகோரி போராடிவருகின்ற தரப்பாக நாம் இருக்கின்றோம்.

இதேவேளை மாற்றுக் கருத்துக்களை ஒடுக்கும் இவ் அரசாங்கம், ஊடகங்களை ஒடுக்கி, மக்களின் கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதை காணக்கூடியதாக உள்ளது.

எனவே ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக ஊடகவியலாளர்கள் ஆகியநாம் தொடர்ச்சியாக குரல் கொடுப்போம் என்பதை அதிகாரத்தரப்பிற்கு தெரிவித்துக்கொள்கின்றோம் என வலியுறுத்தினர்.

ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள், ஊடக சுதந்திரத்தை உறுதிசெய், பொய் வழக்கு போடாதே, ஊடகப் படுகொலைக்கு நீதிவேண்டும், கருத்துச்சுதந்திரமே மக்களின் சுதந்திரம் என்ற கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (நி-5-250)

# பாவற்குளத்தின் வான்கதவுகள் திறப்பு
## மாற்று வீதியை பயன்படுத்துமாறு அறிவுறுத்து

(வவுனியா)
வவுனியா, பாவற்குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால், நெளுக்குளம் - செட்டிகுளம் வீதியை இரவு பயன்படுத்துவதை தவிர்க்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக பாவற்குளத்தின் நீர் வரத்து அதிகரித்து 19.4 அடிக்கு நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. தொடர்ந்தும்மழை பெய்து வருவதனால் மேலும் நீர் மட்டம் சடுதியாக உயர்வடைய வாய்ப்புள்ளது.

இதன்காரணமாக, பாவற்குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் நேரியகுளம் ஊடான நெளுக்குளம் -செட்டிகுளம் வீதியில் நீர் பாய்ந்து செல்வதால் பொது மக்கள் குறித்த வீதியை பயன்படுத்துவதை நிறுத்தி மாற்று வீதிகளை பயன்படுத்துமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (நி-5-250)

# மன்னாரிலிருந்து மேலும் ஏழு பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்

(மன்னார்)
இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக புகலிடம் தேடி மன்னார் மாவட்டத்தை சேர்ந்த, இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஏழு பேர் படகுமூலம் நேற்று முன்தினம் இலங்கையில் இருந்து புறப்பட்டு தனுஷ்கோடியை அடுத்துள்ள மூன்றாம் மணல் திட்டில் சென்று இறங்கியுள்ளனர்.

தகவல் அறிந்த ராமேஸ்வரம் மரைன் பொலிஸார் அவரை மீட்டு முதற்கட்ட விசாரணைக்கு பின்னர் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைத்தனர். பொருளாதார நெருக்கடி காரணமாக இன்று வரை 295 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தனுஷ்கோடி வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## மாற்றுத்திறனாளிகள் தினம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பு நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மாவட்டச் செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் மாற்றுத்திறனாளிகள் அமைப்பு தலைவர் ஏ.பெலிக்ஸ் ஜோய் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் கலந்து கொள்வவுள்ளார். (நி-5)



வடமராட்சியில் உள்ள பாடசாலைகளிடையே நேற்று நடைபெற்ற செயற்பட்டு மகிழ்வோம் போட்டிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 இலட்சம்...

தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நவம்பர் மாதத்தில் மட்டும் 137,703 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகவும் இந்தியாவில் இருந்து 27,281 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா, ஜேர்மனி, பிரிட்டன், அவுஸ்திரேலியா, சீனா, அமெரிக்கா, பிரான்ஸ், போலந்து, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்தும் நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இந்த வருட இறுதிக்குள் 15 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

## அச்சுவேலியில்...

இளைஞனே உயிரிழந்தவராவார்.

விற்பனை நிறுவன வாகனமும் மோட்டார் வண்டியும் மோதியதில் குறித்த விபத்து சம்பவம் ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,60)

## பூமியின்...

சிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் 28ஆவது கால நிலை மாற்றங்கள் தொடர்பிலான COP28 உயர்மட்ட மாநாடு, 54 அரச தலைவர்களின் பங்கேற்புடன் டுபாய் எக்ஸ்போ சிட்டியில் ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐந்தாவது ஆசிய பசுபிக் வலய சுற்றாடல் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களின் மாநாட்டின் இணைக்கப்பாட்டுக்கு அமைவாக, 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் சுற்றாடல் மாநாட்டில் காலநிலை நீதிமன்றம் ஒன்றை நிறுவுவதற்கான யோசனையை இலங்கை முன்வைக்கவிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)

## ஒதியமலை...

செய்யப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

இந்நிலையில், 39ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி அமைதியாக இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென நுழைந்த ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் ஒலிபெருக்கி பாவிப்பதற்கான அனுமதிப் பத்திரம் பெறவில்லை எனத் தெரிவித்து குழப்பத்தை விளைவித்திருந்தனர்.

இதன்போது அந்த இடத்தில் பாரிய குழப்பநிலை ஏற்பட்டது. திட்டமிட்ட வகையிலே ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி நிகழ்வில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கோடு செயற்பட்டதாக அங்கிருந்த மக்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்

கடந்த 14 ஆண்டுகளாக தாங்கள் நிகழ்வை மேற்கொள்வதாகவும் எந்த பொலிஸாரும் குழப்பத்தை விளைவிக்கவில்லை என்றும் நீங்கள் மட்டும் திட்டமிட்டு குழப்பத்தில் ஈடுபடுவதாகவும், நிகழ்வு ஆரம்பிக்க முன்னர் பேசாமல் இருந்து விட்டு இடையில் வந்து குழப்புகிறீர்கள் எனவும் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்

இதன் பின்னர் பத்து நிமிடங்களில் நிகழ்வை நிறைவு செய்யுமாறு பொலிஸார் கூறிச் சென்றனர்.

அதன் பின்னர் ஏற்கெனவே செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக நிகழ்வு இடைநடுவில் நிறைவு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அடுத்த ஆண்டு...

ளோம் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர், காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து மேலும் கூறுகையில்,

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகள் தற்போது வினைத்திறனாக்கப்பட்டுள்ளன.

அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 62 முறைப்பாடுகள் தொடர்பில் மாத்திரமே கடந்த காலங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், புதிய நிர்வாக கட்டமைப்புடன் 4795 முறைப்பாடுகள் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டுக்குள் அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை நிறைவு செய்து ஒரு தீர்மானத்தை எடுக்க எதிர்பார்த்துள்ளோம் என்றார். (ம-7)

## வங்காளவில்...

வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரங்களுக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்கு மீன்பிடிக்க செல்வதை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது குறித்த கடற்பிராந்தியங்களுக்கு சென்றுள்ள மீனவர்கள் மற்றும் கடற்பயணம் மேற்கொள்வோர் உடனடியாக கரைக்குத் திரும்ப வேண்டும் அல்லது பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

வங்காள விரிகுடாவில் நிலவும் குறைந்த தாழமுக்கம்வலுவடைவதால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தாழமுக்கமானது நேற்றுக் காலை 5.30 மணியளவில் திருகோணமலையில் இருந்து வடகிழக்காக 380 கிலோமீற்றர் தொலைவில் நிலை கொண்டிருந்தது.

இன்று அது சூறவளியாக வலுவடையும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, வடக்கு, வடமத்திய, கிழக்கு, வட மேல் மாகாணங்களில் 100 மில்லிமீற்றர் வரையான பலத்த மழை வீழ்ச்சி பதிவாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, வட மேல் மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வரையான வேகத்தில் கடும் காற்று வீசக்கூடுமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ம-7)

## பயங்கரவாத...

உரிமைகள் மரபுகளுக்கு ஏற்ப சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்றும், இதற்கிடையில் உறுதிமொழிகளின் படி பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

## சுனாமி...

இந்த நில நடுக்கமானது ரிக்டர் அளவுகோலில் 5.6 மெக்னிடியூட்டாக பதிவாகியுள்ளது.

அத்துடன், நிலநடுக்கத்தினால் இதுவரையில் எந்தவித சேதங்களும்பதிவாகியிருக்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2023.12.02
சீட்டிழுப்பு இலக்கம் 142
L 6 3 5 6 6 7 L

தன நிதானய
திகதி - 2023.12.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1346
T 07 08 31 43 T
33230

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3558
சீட்டிழுப்பு திகதி 02.12.2023
V 17 26 65 80
V 01145

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.02
சீட்டிழுப்பு இலக்கம் 0625
கன்னி 23 27 54 60 கன்னி
08817 23

மஹஜன சம்பத
திகதி 2023/12/02
சீட்டிழுப்பு இலக்கம் 5316
M 1 7 9 3 4 0

மெகா பவர்
திகதி 02/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1664
Q 09 24 33 79 80
49196

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 02.12.2023 வெற்றி வாரம் 024 வர்ணம் நீலம்
S 7 7 9 0 1 1
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 22,845,195.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2290 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.02 தினம் சனிக்கிழமை
05 07 09 14 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,319,892/-

சனிதா
திகதி 2023.12.02 வெற்றி வாரம் 4451
38 54 62 71 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,627,932.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4002 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.02 தினம் சனிக்கிழமை
06 07 14 54 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,266,472/-

ஜய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 10 01 07 08 22
சீட்டிழுப்பு வாரம் 1466 சிவப்பு 2023.12.02 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 472,383,094.20

ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2116
சீட்டிழுப்பு திகதி : 2023.12.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,256,712/-
11 22 26 52 M


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## S.D Electric Work - கிளிநொச்சி

வீட்டு வயரிங் தொழிற்சாலைக்குரிய three phase வயரிங் panal bord வேலைகள் மற்றும் வீட்டிற்குரிய பைப் லைன் bathroom pitting வேலைகள் பொறியியலாளர்களால் முறைப்படி சிறந்த முறையில் செய்து தரப்படும்.
கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களிலும் எமது சேவை கிடைக்கும்.
(18042)

**076 085 8111**

## கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு

இந்தியா மற்றும் தாய்லாந்திலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete mixer) மற்றும் இத்தாலியிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும்(Hoist) எம்மிடம் உத்தரவாதத்துடனும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
(குறிப்பு - இந்தியா மற்றும் தாய்லாந்து கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே, போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்)
(18070)

**ஆர்க். என். கம்பனி**
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020
A9 வீதி, எழுதுமட்டுவாள், 070 191 3571
HotLine : 071 535 7799/ 071 973 9917



## வேலையாள் தேவை

யாழ் நகரில் இயங்கும் வியாபார கடைக்கு ஆண் வேலையாள் தேவை. சம்பளம் 30,000/= (Basic) முன்னனுபவம் தேவையில்லை.
(18045)

**078 911 3766**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1991 ம் ஆண்டு பிறந்த டுபாய் இல் எஞ்சினியராக பணி புரியும் செவ்வாய் குற்றமுள்ள, நட்சத்திரம் மகம், கிரக பாவம் 60 உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
(18056)

**077 588 7170**

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 299/= (Max 2Kg) |
| 1 Kg றவை | - 289/= |
| 1 Kg Prima கோதுமை | - 189/= |
| 1 Kg கோதுமை மா | - 183/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 298/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 427/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 172/= |
| 1 Kg அரிசி மா | - 195/= |
| 10Kg விஜிதா நாடு | - 1925/= |
| 400g அங்கர் பால்மா | - 1020/= (1080/=) |
| 750ml New V.S.P நல்லெண்ணை | - 1300/= (1400/=) |
| 70g Baby Soab | - 108/= (145/=) |
| 400g sustagen சஸ்ரயன் | - 3400/= (3900/=) |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 262/= (330/=) |
| 180ml Chik Shampoo | - 370/= (480/=) |

1020/=
Anchor
1080/-
(18090)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378**
**076 097 3127**

## வேலைவாய்ப்பு - Security Guard

உரும்பிராயில் அமைந்துள்ள Super market ஒன்றிற்கு Security Guard (காவலாளி) ஒருவர் தேவை.
(18090)

**077 945 5167**

## இராஜ மருத்துவம்

வாதம், பாரிசவாதம், குத்துளைவு, கரப்பன், கிரந்தி, சொறி, வீக்கம், நோவு, சளி, தும்மல், பீநிசம், நீரிழிவு கொப்பவாயு, நெஞ்சுக்குத்து, நித்திரையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள
பேராசிரியர் Dr.K.பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர், T.P : 076 274 4488
வல்லை வீதி, சங்கானை.
(C-7784)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**
(C-7787)

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## Canada and Italy Visa

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும். மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
பணியாளர் தேவை
(18039)

**VISA CONSULTANT**
134, Adiyapatham Road,Thirunelvely, Jaffna.
**077 038 5584**

## விரைவு பொதிகள் சேவை

DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
(18039)

Lanka Cargo Worldwide Express
பணியாளர் தேவை
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
070 375 0002

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7787)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
09 . 07 . 1935

ஆண்டவன் அடியில்
28 . 11 . 2018

அமரர்
### திருமதி சங்கநிதி தபானந்தம்
( மண்டைதீவு )

திதி : கார்த்திகை மாத அபரபக்க ஷஷ்டி

"அன்பொடு அதிகாரமாய் எமை ஆண்ட தெய்வமே!
நின் முகம் பார்த்து நின் குரல்கேட்டு
ஆண்டு ஐந்து ஆனதம்மா! - எம்
காவல் தெய்வமாய் நீ இருக்க
களிப்புடனே நாம் வாழ்ந்தோமே!
கடுகதியாய் எமைவிட்டு காலன் உனை கவர்ந்தானே!
காற்றாய் வந்த செய்தி எமை
கதிகலங்க வைத்தது இன்றுபோல் உள்ளதம்மா!
காவியமான எம் அன்னையே! அம்மையே!
எமை காத்திட நின்பாதம் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 15, குளம்கரை லேன்,
கொக்குவில்.
(18079)

நின் ஆத்ம சாந்திக்காய் வேண்டும்
குடும்பத்தார்

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 04 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**
- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 Km,
- திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 Km, நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 Km, திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 Km

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை
(18066)

தொடர்புகளுக்கு : ஜெயம்
**077 814 7389,**
**077 986 5457**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org